Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 27 ஞாயிற்றுக்கிழமை (09.02.2014) பக்கங்கள் 20 ஓசை – 131

08
இரத்தமில்லா சிசு



10
நெடுஞ்சாலை



## பிரிவினைவாதத்தை தூண்டும் அமைப்புக்களை தடை செய்க

### அமைச்சர் விமல் கோரிக்கை

(கொழும்பு)

பிரிவினைவாதத்தை தூண்டும் அமைப்புக்களை தடை செய்ய வேண்டுமென வீடமைப்பு பொறியியல் நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். எந்தவொரு அமைப்பும் பகிரங் கமாகவோ அல்லது மறைமுகமாகவோ பிரிவினைவாதத்தை தூண்டும் வகையில் செயற்பட்டால் அவற்றைத் தடை செய்ய வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலை ஈழக்கோரிக்கைக்கு எதிரான மக்கள் கருத்துக் கணிப்பாக கருதி மக்கள் வாக்களிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். எந்தவொரு நபரும் அரசாங்கத்தை மாற்றுவது குறித்து பகிரங்கமாக குறிப்பிட முடியும் அது தவறில்லை எனினும், நாட்டை பிளவுபடுத்தக்கூடிய வகையிலான கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டை பிளவுபடுத்தக் கூடிய 13ஆவது திருத்தச் சட்டத்தின் சரத்துக்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

## சமாதானத்தை முழுமையாக அனுபவிக்க முடியாமல் மக்கள்

### அமைச்சர் பீரிஸ் கவலை



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் சவால்கள் காரணமாக இலங்கை மக்கள் சமாதானத்தை முழுமையாக அனுபவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளர்ர்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

லிபியா மற்றும் ஈராக் போன்ற நாடுகளைப் போன்று இலங்கையிலும் ஊடுருவுவதற்கு சில தரப்பினர் முயற்சித்து வருகின்றனர்.

லிபியாவில் அந்நாட்டு அதிபர் முஹம்மர் கடாபி ஓர் நாயைப் போன்று கொலை செய்யப்பட்டதுடன், ஈராக்கில் அந்நாட்டு ஜனாதிபதியை பலவந்தமாகவும் பதவி விலக்கினர்.

சில சர்வதேச சக்திகள் இலங்கைக்குள் செய்ய முடியாதவற்றை வெளிநாடுகளில் இருந்து கொண்டே மனித உரிமையைக் கருவியாகப்

(19) பக்கம் பார்க்க...

# இந்திய மாநில அதிகாரமே இலங்கையிலும் வேண்டும்



## சென்னையில் சம்பந்தன் தெரிவிப்பு

(சென்னை)

இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கு எத்தகைய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோ அது போன்ற அதிகாரத்தைத் தான் இலங்கையிலும் எதிர்பார்க்கிறோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சென்னை அடையாறில் உள்ள இந்திய தெற்காசிய ஆய்வு மையத்தில் நேற்று முன்தினம் சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சி இடம்பெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், 'இலங்கையின் இன்றைய போக்கு' என்ற தலைப்பில் உரையாற்றினார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை ஜனாதிபதியாக ராஜபக்ஷ பொறுப்பேற்றதும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தார். இதற்காக 16 பேர் கொண்ட நிபுணர் குழுவையும் அமைத்தார்.

(19) பக்கம் பார்க்க...

## வாள்கள், இராணுவச் சீருடை; கொக்குவிலில் நால்வர் கைது

யாழ்.கொக்குவில் தலையாளி ஞானவைரவர் ஆலயத்தின் மடத்தில் வாள்கள் மற்றும் இராணுவச் சீருடையுடன் இருந்த 4 பேரை நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், அவர்களிடமிருந்து 4 வாள்களும், ஒரு தொகுதி இராணுவச் சீருடையும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

ஆலய நிர்வாகத்தினரின் அறிவுறுத்தலையும் மீறி அவர்கள் மடத்தில் இருந்ததாகவும், தமக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்று அவர்களைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நான்கு பேரையும் தற்போது பொலிஸ் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இவர்களுக்கும் யாழில் இடம்பெற்ற குற்றச் செயல்களுக்கும் தொடர்புகள்

(19) பக்கம் பார்க்க...

### இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவு

## ஜப்பான், தென்கொரியாவிற்கு அழுத்தம் கொடுக்கும் அமெரிக்கா

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்திற்கு ஆதரவு வழங்குமாறு இலங்கை சார்பு நாடுகளான ஜப்பான் மற்றும் தென் கொரியாவிற்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வருவதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஐலன்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரவுள்ள தீர்மானத்துக்குப் பக்கபலமாக இருக்குமாறு இலங்கையின்

(19) பக்கம் பார்க்க...

## யுத்த காலத்தில் பிரிந்த சிறுவர்கள் மீளவும் பெற்றோரிடம் இணைப்பு



(யாழ்ப்பாணம்)


வடமாகாண ஆளுநர் சந்திரசிறியின் பணிப்பிற்கமைய வடமாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தினால் யாழ்.கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் தமது குடும்பங்களுடன் மீள இணைக்கப்பட்டுள்ளனர்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் இந்த மூன்று சிறுவர்களையும் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைத்ததுடன், அவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி வைத்துள்ளார்.

(19) பக்கம் பார்க்க...

## அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் இரண்டு வாரங்களில் பணிகள் ஆரம்பம்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் எதிர்வரும் இரண்டு வாரங்களில் முதலீட்டாளர்களுக்கான இடங்கள் அடையாளப்படுத்தப்படும் அதே வேளை, வேலைகளையும் ஆரம்பிக்க முடியுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் நேற்றைய தினம் தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு

(19) பக்கம் பார்க்க...

# கசிப்பு உற்பத்தி நடவடிக்கை; சிரமத்துக்குள்ளாகும் இந்துபுரம் மக்கள்

(முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தின் திருமுறுகண்டி இந்துபுரம் கிராமத்தில் இடம்பெறும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கையால் இக்கிராமத்தில் வாழும் ஏனைய மக்கள் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக இக் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இக்கிராமத்தில் 16 குடும்பங்கள் வசித்துவரும் நிலையில் ஒரு சிலர் கூட்டாக இணைந்து கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் கசிப்பு விற்பனையால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதாக இக்கிராம மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

கசிப்பு விற்பனையின் போது வெளியிடத்தவர்களும் இதனை வாங்கிஅருந்திவிட்டு தகாத வார்த்தை பிரயோகங்களை பயன்படுத்தப்படுவதுடன் அவ்வழியால் செல்லும் ஏனையவர்களுடனும் வீண் வாக்குவாதங்களுடன் சண்டைகளிலும் ஈடுபடுவதாகவும் இதனால் தாம் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கசிப்பு நடவடிக்கை குறித்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தினால் இவர்களை பொலிஸார் கைது செய்து சிறு தண்டனையின் பின்னர் விடுதலை செய்வதால் மீண்டும் கசிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கும் இக் கிராம மக்கள் இதுதொடர்பில் உரிய அதிகாரிகளோ அல்லது பொலிஸாரோ தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

# நோய்த்தாக்கத்துடன் வெங்காயம்; கவலையடையும் விவசாயிகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி, புத்தூர், ஆவரங்கால், தம்பாலை, வளலாய் கதிரிப்பாய் போன்ற பகுதிகளிலுள்ள தோட்ட நிலங்களில் விவசாயிகளால் அண்மையில் செய்கைபண்ணப்பட்ட வெங்காயப் பயிரானது நோய்த்தாக்கத்துடன் காணப்படுவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வெங்காயப் பயிரானது தடல்



கள் சுருண்டு காணப்படுகின்றது. இதனால் விளைச்சல் குறைவாகவே கிடைக்கும் எனத்தெரிவிக்கும் விவசாயிகள் தமக்கு நஷ்டம் ஏற்படும் நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் வங்கிகள் மற்றும் ஏனைய விவசாய சம்மேளனங்கள் மூலம் பெறப்பட்ட கடன்களைச் செலுத்த முடியாத நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலத்தில் பெருந்தொகையான வெங்காயப் பயிர்கள் முற்றாக அழிவடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (85)

# ஓய்வூதியம் வழங்கல்

அரச ஓய்வூதியர்களின் இம்மாத ஓய்வூதியம் நாளை வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஓய்வுதிய வவுச்சர்கள் பிரதேச செயலகங்களினால் தபால் மூலம் ஓய்வுதியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தினால் 8 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்துக்காக அறிவித்தல் ஓய்வுதிய வவுச்சருடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (104)

# புதிய அதிபர் நியமனம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் புதிய அதிபராக அளவெட்டியைச் சேர்ந்த [illegible].சு. மணிசேகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பலத்த எதிர்பார்ப்புக்களைத் தோற்றுவித்திருந்த கல்லூரியின் அதிபர் நியமனத்தில் முன்னர் கல்லூரியின் பிரதி அதிபராக கடமையாற்றிய மணிசேகரன் நியமிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமென தெரிவிக்கப்படுகின்றது. அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தின் முன்னாள் தலைவரான [illegible].மணிசேகரன் ஒரு விஞ்ஞானப்பட்டதாரி என்பதுடன் கல்வியியல் துறையில் முதுமானிக் கற்கையையும் நிறைவுசெய்துள்ளார். இலங்கை அதிபர் சேவைத் தரம் 2 ஐச் சேர்ந்த இவர் சிறந்த கணிதத் துறை ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# டெங்குத் தொற்று; நேற்றும் மூவர் அனுமதி

டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மூவர்சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேலணை, உடுவில் மற்றும் யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இருந்தே இவர்கள் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ் வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களுடன் இந்த மாதத்தில் நேற்று வரை 18 பேர் டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகி சிகிச்சைக்கு அனுமதிக்கப் பட்டிருப்பதாக அவ்அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

# பீம ஏகாதசி தீர்த்தம்

(குருநகர்)

நாகேஸ்வரம், அளவெட்டி மேற்கு ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை ஏகாதசித் தீர்த்தம் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டப பூசை நடந்தேறி ஸ்ரீமத் நாராயணர் பூமாதேவி, ஸ்ரீதேவி புடைசூழ அலங்காரத்தண்டிகையில் வீதியுலா-எழுந்தருளுவார்.

மதியம் 12 மணிக்கு மகேஸ்வர பூசை நடைபெறும். (68)

# கைவிடப்பட்டது பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் நாளை மேற்கொள்ளப்படவிருந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டமானது, சம்பளங்கள் ஆளணிகள் ஆணைக்குழுவின் 06.02.2014 ஆம் கடிதத்தின் பிரகாரம் சாதகமான தீர்வினை எட்டியகாரணத்தினால் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தில் ஏற்கனவே தமது இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்த வகுப்பு மூன்றில் ஆறு வருடகால சேவையினைப் பூர்த்திசெய்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வகுப்பு இரண்டிற்கு உடனடியாகப் பதவி உயர்த்தப்படுவர் எனவும், இப்பரீட்சையில் சித்தியடையாத வகுப்பு மூன்றினைச சேர்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக வகுப்பு மூன்றில் தொடர்ச்சியான வேதன ஏற்றங்களைப் பெற்று கடமையாற்ற வேண்டும் என்கின்ற தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் உத்தியோகத்தர்களின் தொடர்ச்சியான வேதன ஏற்றம் தடையின்றி வழங்கப்படவுள்ளமையினால், பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.


ஆயினும் இது தொடர்பாக விசேட பொதுக்கூட்டம் ஒன்றினைக் கூடி அதனடிப்படையிலேயே உத்தியோகத்தர்களின் எதிர்கால நடவடிக்கைகள் அமையுமென சங்கத்தின் செயலாளர் கே.எஸ்.மயூரன் அறிவித்துள்ளார். (90)

# பனங்கள் சீசன் ஆரம்பம்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதிகளில் பனங்கள்ளு சீசன் ஆரம்பமாகியுள்ளது.

சீவல் தொழிலாளர்கள் தற்போது பனைகளில் ஏறி "கள்" எடுப்பதற்கான பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.



இன்னும் ஓரிருவாரங்களில் கள்ளை முழுமையாக பெற்று பனையாளர்களுக்கு வழங்க முடியும் என்று தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (104)


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி எண் 229 | திகதி 2014.02.07 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்

08 36 41 57 1

பரிசுத் தொகை ரூபா.12,378,160/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| [illegible] | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| [illegible] | 50,000/- | 08 | 400,000/- |
| [illegible] | 1,000/- | 225 | 225,000/- |
| [illegible] | 1,000/- | 394 | 394,000/- |
| [illegible] | 60/- | 9890 | 593,400/- |
| [illegible] | 40/- | 5177 | 207,080/- |
| [illegible] | 20/- | 129757 | 2,595,140/- |
| [illegible] | 20/- | 18876 | 377,520/- |
| [illegible] | 12,378,160/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,792,140/- |

[illegible] ரூபா. 12,631,940/-

2014.02.11ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3265)


# மோட்டார் சைக்கிள் மோதி பெண்ணின் கால் முறிவு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மவுன்காமம் வீதியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் வயோதிபப் பெண் ஒருவர் கால் முறிந்து படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் வயோதிபப் பெண்ணை மோதிய மோட்டார் சைக்கிள் அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில் அயலில் உள்ளவர்களால் அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை நடைபெற்ற இவ் விபத்தில் மணியம்தோட்டத்தைச் சேர்ந்த அ.பெத்தம்மா (வயது 74) என்ற வயோதிபப் பெண்ணே விபத்துக்குள்ளாகியவர்.(பா)

# சி.பி.ஆர். திட்டம் இணைப்பு

சமூக சேவைகள் அமைச்சுடன் இருந்த மாற்றுத் திறனாளிகளை சமூக மட்டத்தில் வைத்து புனர்வாழ்வளிக்கும் சி.பி.ஆர் திட்டம் தற்போது சமூக சேவைகள் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை இவ் வருட ஆரம்பம் முதல் நடைமுறைக்கு வந்ததாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். அத்துடன் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் புதிய பணிப்பாளராக சுவிந்த எஸ் சிங்கப்புலி நியமனம் பெற்றுள்ளார்.

இதுவரை காலமும் பதில் கடமை புரிந்த அனுசா கோகுல பெர்ணாண்டோ தற்போது சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் கடமையை மட்டும் ஆற்றி வருகின்றார். (90)

# முற்றியது குடும்பத்தகராறு கைகலப்பில் பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராறு காரணமாக பெண் ஒருவர் மற்றொரு குடும்பத்தினரால் அடித்துப்படு காயப்படுத்தப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுக் காலை நல்லூர்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் நல்லூரில் தற்காலிகமாக வசித்துவரும் உடுவிலைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் பாலரஜனிதேவி (வயது 45) என்பவரே படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இந்தச் சம்பவத்தில் காயங்களுக்குள்ளாகிய பெண்ணின் பெறாமகனின் முறையில் ஒருவரும் அவரது மனைவியுமே தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (பா)

# யுத்தத்தால் உறவுகளைப் பிரிந்த சிறார்கள்

## மீண்டும் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் இறுதி யுத்த காலப்பகுதியில் தமது குடும்பங்களைப் பிரிந்து வாழ்ந்து வந்த சுமார் 56 சிறுவர்கள் இதுவரை தமது குடும்பங்களுடன் மீள் இணைக்கப்பட்டிருப்பதாக வடமாகாண சிறுவர் நன்நடத்தைத்திணைக்கள ஆணையாளர் ரி.விஸ்வரூபன் தெரிவித்துள்ளார்.

நேற்று வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற தமது குடும்பத்தை பிரிந்து வாழ்ந்த மூன்று சிறுவர்களை அவர்களது குடும்பங்களிடம் மீள ஒப்படைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், வடமாகாணத்தில் இவ்வாறு குடும்பங்களை விட்டுப்பிரிந்த சிறுவர்கள் குறித்த 700 வரையான முறைப்பாடுகள் தமது திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்த அவர் இவற்றில் மேலும் 46 சிறுவர்கள் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டு அவர்களது குடும்பங்களுடன் மீள் இணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவித்துள்ளார்.



மேலும் தமது திணைக்களத்திற்கு கல்கமுவ ஆலோசகராக செயற்பட்டுவருவதாகவும் தெரிவித்த அவர் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் பணிப்பிற்கமையவே இவ்வாறான நடவடிக்கையை துரிதமாக மேற்கொண்டுவருவதாகவும் தெரிவித்துள்ளார். (பா)

## செல்வவிநாயகர் திருவருளமுதம் கும்பாபிஷேக மலர் வெளியீடு

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி அருள்மிகு ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேக சிறப்பு மலரான செல்வ விநாயகர் திருவருளமுதம் வெளியீட்டு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அருளாசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கனகசிவகுமாரக்குருக்கள், சிவஸ்ரீ இரத்தின பாலகிருஷ்ண குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து நூல் வெளியீட்டுரையை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி கலாநிதி நி.நல்லையா, நயப்புரையை நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை அதிபர் ந.தேவராஜா சிறப்புரையை வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆகியோர் வழங்கவுள்ளனர். (109)

## பொதுக்கூட்டம்

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் செயலாளர் அறிக்கை, பொருளாளர் அறிக்கை என்பன பற்றி கலந்துரையாடப்படவுள்ளது. (51)

## புதியநிர்வாகத்தெரிவு

கரவெட்டி பிராந்திய சிக்கன கடன் வழங்கு சங்கங்களின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் தலைவராக கொ.குணசிங்கம், உபதலைவராக திருமதி பத்திப்பிள்ளை, நிர்வாகசபை உறுப்பினர்களாக அ.குலநாயகம், பி.பிறேமதாஸன், இ.இராமச்சந்திரன், ம.பிரபாகரன், திருமதி தவராசா கீதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (18)

## முதியோர்களுக்கான கொடுப்பனவு

சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகம் கிளிநொச்சி மாவட்டத்தில் 70 வயதை அடைந்த வறிய முதியோருக்கு தலா 1000 ரூபா வழங்குவதற்கென 2014 ஆம் ஆண்டுக்கு 37 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதன்படி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 1510 பேரும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 727 பேரும், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 357 பேரும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 442 பேரும் இக் கொடுப்பனவைப் பெறவுள்ளனர்.

இவர்கள் தமது பிரதேசங்களில் உள்ள தபாலகம், உப தபாலகம் மூலமாக இக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வார்கள், அரசாங்கம் 2012 ஆம் ஆண்டு முதல் இக் கொடுப்பனவை நாடுமுழுவதுமுள்ள 70 வயதை அடைந்த வறிய முதியோருக்கு வழங்கி வருகின்றது. (90)

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 8ஆவது பொதுக்கூட்டம்

(கரணவாய்)

வலி.தென் மேற்கு பிரிவின் அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 8ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நம்பிக்கை நிதியத்தின் தலைவர் எம்.எக்ஸ்.சர்வாநந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேச செயலர் மு.முரளிதரன், சிறப்பு விருந்தினர்களாக வலி.தென் மேற்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி செல்வக்குமாரி நேசரட்ணம், பிரதேச செயலக கணக்காளர் நா.லோகநாதன், யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத் தலைவர் இ.ஸ்ரீசக்திவேல், ஓய்வூதிய உத்தியோகத்தர் திருமதி சுகந்தினி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (104)




## சாதித்துக் காட்டுவதும்... சங்கூதிக் கெடுப்பதும்...

சில காரியங்களை நிறைவேற்றுவதாக இருந்தால், சில தந்திரோபாயங்களைக் கையாள வேண்டும்.

அப்பொழுதுதான் வெற்றியை இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கு நல்லதொரு உதாரணம் – கிளிநொச்சியில் கடந்த 06.02.2014 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விவசாய பீடம், பொறியியல் பீடங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டமை.

இந்தப் பீடங்கள் அமைந்திருந்த இடத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன், இலங்கை இராணுவத்தின் மிகப்பெரிய இராணுவ வளாகம் அமைந்திருந்தது.

அதற்கு முன்னர் இந்த வளாகத்தை உருவாக்கியது விடுதலைப் புலிகள்.

ஆகவே, புலிகள் உருவாக்கிய கட்டடத் தொகுதியில் வழமையைப் போல படையினர் நிலைகொண்டிருந்தனர்.

இவ்வாறு நிலைகொண்டிருந்த படையினரை அங்கிருந்து பக்குவமாக வெளியேற்றி, அந்த வளாகத்தில் பல்கலைக்கழகத்தை இயங்க வைத்திருக்கிறார்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும்.

இந்த விடயத்தை புத்திபூர்வமாக சாதித்து வெற்றியடைந்திருக்கின்றார்கள் இந்த இருவரும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, கொக்காவிலில் அமைக்கப்பட்ட தொலைத் தொடர்புக் கோபுரத்தை இயங்க வைப்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ வந்திருந்தபோது, இந்த வளாகத்தை பல்கலைக்கழகங்களின் பீடங்களை இயக்குவதற்குப் பயன்படுத்தலாம் என்று தெரிவித்திருக்கின்றார் டக்ளஸ் தேவானந்தா.

இதைத் தொடர்ந்து அதற்கான அனுமதியைக் கொடுத்து, அங்கிருக்கும் படையினரை வெளியேற்றுவதற்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறார் மகிந்த ராஜபக்ஸ.

இந்த வெற்றி தமிழ் சமூகத்தின் வெற்றியே. அதிலும் குறிப்பாக வன்னி மக்களுக்கு கிடைத்த வெற்றியே.

இதைப் போன்று இன்னொரு வெற்றியும் பெறப்பட்டுள்ளது. அது தான் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானமாகும்.

சர்வதேச விளையாட்டு மைதானமாக இந்த மைதானம் அமைய வேண்டும் என்ற முயற்சிகள் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னரே எடுக்கப்பட்டிருந்தன. அந்தக் கனவு இப்பொழுது நிஜமாகி வருகிறது.

அடுத்த சில மாதங்களில் இந்த மைதானம் சர்வதேச தரம் வாய்ந்த மைதானமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஆனால், 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர், இந்த இடத்திலும் படையினரே நிலைகொண்டிருந்தனர்.

அவ்வாறு நிலைகொண்டிருந்த படையினரை அப்புறப்படுத்தி மைதானம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதொரு விடயம். இதுவும் ஒரு வெற்றியே.

இதைப்போல பல காரியங்கள் – வெற்றிகள் – நடந்துள்ளன. சாந்தபுரப் பிரதேசம் மக்கள் வாழும் பகுதியாக மாற்றப்பட்டது, கிளிநொச்சி மத்திய கல்லூரி மீளவும் பாடசாலையாகியது, செஞ்சோலை வளாகம் மீண்டும் செஞ்சோலை வளாகமாகவே இயங்குவது எனப் பலவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றை மக்களின் தேவைகளுக்காக மாற்றியமைத்த செயல்கள் மிக முக்கியமானவையாகும்.

இதேவேளை, கிளிநொச்சி கனகபுரத்தில் கைவிடப்பட்டிருந்த மாவீரர் துயிலும் இல்லம் இன்று படை முகாமாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த துயிலும் இல்லம் போர்க்காலத்தில் சிதைக்கப்பட்டிருந்தாலும் பின்னர் எந்த ஆதிக்கத்தின் கீழும் இல்லாமல் வெறுமனே இருந்தது.

ஆனால், கரைச்சி பிரதேச சபையிலும் சாவகச்சேரி நகர சபையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கொண்டு வந்த ஒரு தீர்மானத்துடன் துயிலும் இல்லம் படைமுகாமாகியது. கிளிநொச்சி துயிலும் இல்லம் மட்டுமல்ல, பிற துயிலும் இல்லங்களும் கூட இன்று படைமுகாம்களாகியுள்ளன.

விவேகமற்ற செயல்கள் எப்படி நெருக்கடியாகவும் பாதகமாகவும் அமையும் என்பதற்கு இவை உதாரணம். தந்திரோபாய நடவடிக்கைகள் எப்படி வெற்றியாக அமையும் என்பதற்கு முன்னவை உதாரணம்.

சுத்தியலை ஆணியை அறையவும் பயன்படுத்தலாம். ஆணியைப் பிடுங்கவும் பயன்படுத்தலாம். கையாள்வதைப் பொறுத்துத்தான் எதுவும்.

# கரவெட்டி பகுதிகளில் தொடரும் கட்டாக்காலி நாய்களின் தொல்லை



(கரணவாய்)

கரவெட்டி பிரதேசத்தில்குறிப்பாக 750 பிரதான வீதிப்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதால் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்படுவதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நெல்லியடி புதிய சந்தைப் பகுதி, வர்த்தக நிலையங்கள், வங்கிகள் போன்றவற்றுக்கு முன்பாக கட்டாக்காலி நாய்களும் அலைந்து திரிவதால் மக்கள் அச்சத்தின் மத்தியில் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் வாகன ஓட்டுநர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் சிரமத்துக்குள்ளாவதாகவும் குறிப்பாக நாள் ஒன்றுக்கு ஒருவராவது நாய் கடிக்கு ஆளாவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக்கட்டாக்காலி நாய்களால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் தெரிவிக்கும் மக்கள் போக்குவரத்து நெருக்கடியை தவிர்க்க கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்தும் வகையில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

மேகத்தைக் காற்று கலைப்பதைப் போல ஆண்டவன் நாமம் உலகப் பற்றாகிய மேகத்தைக் கலைத்துவிடும்.

- சாரததேவியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மாற்றுத் தரப்பற்ற சூழல் சரியா?

நாட்டில் ஜனநாயகம் தழைத்தோங்குவதற்கு பல கட்சிகள் இயங்க வேண்டியது அவசியம். பல கட்சிகள் இல்லாவிட்டாலும் கூட எதிர்க்கட்சி ஒன்றேனும் பலமாக இருக்க வேண்டியது கட்டாயம். அப்போதுதான் தவறுகள் தட்டிக் கேட்கப்பட்டு, திருத்தப்பட்டு, அல்லாதபோது அதிகாரம் கைமாற்றப்பட்டு சரியான திசையில் நாடும் மக்களும் நகர முடியும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், 1980களின் நடுப்பகுதியில் இருந்து, ஒற்றுமையாக எதிரியை வெல்லுதல் என்ற கோஷத்துடன் ஒரேயொரு தமிழ்த் தலைமை மட்டுமே இருக்க முடியும் என்பது வன்முறையால் நிலைநிறுத்தப்படலாயிற்று.

எதிர்த்தரப்பை வெல்லவும், தனிநாட்டை அடையவும் தமிழர்கள் எல்லோரும் ஒரே ஒரு அமைப்பின் கீழ் ஒன்றுபட்டு நின்றால்தான் சாத்தியம் என்பதாகவும், போரிட்டுப் பெறவேண்டிய விடுதலையை பெறமுடியாதவாறு, தமிழர்களுக்குள்ளே ஜனநாயகம் வேண்டும் என்ற கோரிக்கைகள் கெடுத்துவிடும் என்பதாகவும் பெரும்பாலோரால் நம்பப்பட்டது; அல்லது அப்படி நம்ப வைக்கப்பட்டது.

கன்னப்பட்டைகள் கட்டப்பட்ட குதிரைபோலச் சென்ற அந்த ஏகப்பிரதிநிதித்துவப் போக்கு, நம்மை முள்ளிவாய்க்கால் படுகுழி செல்லும்வரை வேறு பக்கங்களைப் பார்க்க விடவில்லை. அதனால் தமிழ் மக்கள் அடைந்த இழப்பு இன்று எல்லோருக்கும் தெரியும். அந்த உயிரிழப்புகள் மட்டுமல்ல, அரசியல்ரீதியாகவும் மிகப் பின்னடைவிற்குப் போயிருக்கிறோம் என்பதே உண்மை.

மாற்றுக் கருத்துக்களை எழவே விடாது, நடப்புலகைக் காணவும் மனமொண்ணாது, இதே தலைவர்களாலும் சமூகப் பெரியவர்களாலும் கனவுலகத்தில் மிதத்தியபடி நடத்திச் செல்லப்பட்டு எங்கே போய் விழுந்தோம் என்பது இன்று யாவருக்கும் தெரியும்.

கொடுமை என்னவென்றால், இப்போதும் அதே ஏகப்பிரதிநிதித்துவ ஒற்றுமையை மக்களிடம் கேட்டபடியே, அதே தலைவர்கள் அதே கோஷங்களுடன் வலம் வருவதுதான். இன்றும் அவர்கள், தமிழ்மக்களுக்கு ஒரே ஒரு கட்சியே இருக்க வேண்டும்; மற்றைய கட்சியினர் எல்லாம் தமிழ்த் துரோகிகளாகத்தான் இருக்க முடியும் என்பதைச் சொல்லியே மக்களை ஏமாற்றி வருகிறார்கள்.

இதுவரை காலமும் காட்டிய ஒற்றுமையால் எதையுமே சாதிக்காத இவர்கள், இனிமேலும் அதே தங்கள் வெத்துவேட்டு அரசியலைத் தொடர வசதியாக, இங்கு எதிர்க்கட்சி எதையும் தோன்றவிடாது தங்கள் சர்வாதிகாரத் தேசியத்தை தன்னாட்சிக்கான வழி எனச் சொல்லி ஏய்க்கிறார்கள்.

இந்த ஏகப்பிரதிநிதித்துவ மாயைக்குள், மாற்றுச் சிந்தனைகளை மாற்றுக் கட்சிகளைப் புறந்தள்ளி இங்கு ஜனநாயகச் சூழல் உருவாகிவிடாமல் பார்த்துக்கொண்டிருக்கும் ஏகத்துவவன்முறையாளர்கள் இவர்களே.

நீதிக்கும் சமத்துவத்துக்கும் கௌரவத்துக்குமான போராட்டம் என்பது இன்றைய சிக்கல்களையும் யதார்த்த நிலைமைகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டதாகவே வடிவமைக்கப்பட வேண்டும். வெறும் உணர்ச்சிவசப்பட்ட விருப்பங்களை விசிறியடித்தபடியே இந்த சிக்கல்களைக் கடந்துவிட முடியாது.

இதற்கு, வலுவான மாற்றுத் தரப்பொன்று தமிழ்மக்களிடையே உருவாக வேண்டியது காலத்தின் கட்டாயம். தமிழ் சமூகத்திற்குள் உள்ள சிந்திக்கும் தரப்பினர் அனைவரும் இது குறித்து உரையாட முன்வரவேண்டும்.

இந்த நாட்டையும் மக்களையும் மேலும் பாழ்படுத்தாது, காப்பாற்றுவதிலும் முன்னேற்றுவதிலும் அக்கறை இருக்கக் கூடிய அனைத்துத் தரப்பினரும் இறங்கி, செயற்படும் தளத்தில் சந்தித்துக் கொள்ள வேண்டிய தருணம் இது.

- ஆசிரியர்.

# புலிகளால் கொல்லப்பட்ட தலைவர்களுக்கு நினைவுத்தூபி அமைக்க வேண்டும்

## வடக்கு முதல்வரிடம் கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கொலை செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களுக்காக நினைவுத்தூபியொன்று அமைக்கப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரியுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சி, வட மாகாண சபையின் முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. அண்மையில் வட மாகாணசபையில் 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களுக்கு நினைவுத்தூபி அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்த தீர்மானங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகளினால் கொலை செய்யப்பட்ட சாம் தம்பிமுத்து, அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், நீலன திருச்செல்வம், பீ.யோகேஸ்வரம் போன்றோர்களுக்காக நினைவுத்தூபி அமைக்கப்பட வேண்டும் இந்தப்படுகொலைகள் மன்னிக்க முடியாதவை.

பத்மநாபன், உமாமகேஸ்வரன் உள்ளிட்ட தலைவர்களுக்காகவும் நினைத்தூபி அமைக்கப்பட வேண்டும். இது தொடர்பில் வட மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரியுள்ளது.

# இந்திய மீனவர்களின் கைது; கடற்படைப் பேச்சாளர் விளக்கம்

(கொழும்பு)

இந்தியாவின் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 15 மீனவர்கள் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டு 24 மணிநேர விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டதாக வெளியாகியிருக்கும் செய்திகளை கடற்படையினர் மறுத்துள்ளனர்.

அவ்வாறானதொரு சம்பவம் எதுவும் இடம் பெறவில்லையென்றும் கடற்படையினர் இந்திய மீனவர்கள் எவரையும் கைதுசெய்து நடுக்கடலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தவில்லையென்றும் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

சர்வதேசக் கடல் எல்லையை மீறி இலங்கைக்குள் நுழையும் மீனவர்களைக் கைதுசெய்து கரைக்கு அழைத்துவந்து மீன்பிடித் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைப்பதே கடற்படையினரின் பொறுப்பு. நாம் எவரையும் நடுக்கடலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்துவதில்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

கச்சத்தீவுக் கடல்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வர மீனவர்கள் 15 பேர் கடந்த புதன்கிழமை காலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகவும், அவர்களிடம் நடுக்கடலில் விசாரணை நடத்தப்பட்டு 24 மணி நேரத்தின் பின்னர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காலை 9.00 மணிக்கு கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் பகல் முழுவதும் விசாரிக்கப்பட்டு இரவு 11 மணியளவில் விடுவிக்கப்பட்டதாக அந்த ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன. எனினும், அவ்வாறான கைது நடவடிக்கை எதுவும் இடம்பெறவில்லையென்பதை கடற்படைப் பேச்சாளர் உறுதிசெய்துள்ளார்.

## வாக்காளர் பட்டியலில் திருத்தம்; மீண்டும் ஒரு சந்தர்ப்பம்

(கொழும்பு)

வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்ய விரும்பும் வாக்காளர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கிறது.

இதன்படி வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ள விரும்பும் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்பதாக விபரங்களை தேர்தல் செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.முஹம்மட் கேட்டுள்ளார்.

# மிருகவதைக்கு எதிராக சிஹல ராவய போராட்டம்

## தடையையும் மீறி நடவடிக்கை

(கொழும்பு)

மிருக வதைக்கு எதிராக 'சிஹல ராவய' அமைப்பு போராட்டம் நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையின் எந்தப் பாகத்திலும் இந்த அமைப்பு போராட்டங்களை நடத்தக் கூடாது என நீதிமன்றம் 'சிஹல ராவய' அமைப்பிற்கு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த உத்தரவினையும் மீறி எதிர்வரும் வாரத்தில் போராட்டம் நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரையில் சிஹல ராவய அமைப்பு மிருக வதைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

கண்டி தலாத மாளிகையிலிருந்து கொழும்பில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகை வரையில் இந்தப் போராட்டம் நடத்தப்பட உள்ளது.

நாட்டில் மிருக வதையை தடை செய்யுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட உள்ளதாக இவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

## இலவச குடிநீரத் திட்டம் காரைநகரில் ஆரம்பம்

காரைநகரில் இலவச குடிநீர் விநியோகத் திட்டம் வியாவில் ஐயனார் ஆலய தர்மகர்த்தவும் மகாராணி புடவையக உரிமையாளருமான சோமசேகரம் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் பிரதேச இணைப்பாளரும், காரைநகர் பிரதேச சபை எதிர்க் கட்சித்தலைவருமான வீ.கண்ணன், எமது பிரதேசத்தில் தண்ணீர் பஞ்சம் மிகவும் கொடூரமானது. இந்த ஆண்டு பருவமழை வீழ்ச்சியாக உள்ளதால் தண்ணீருக்கு மிகுந்த தட்டுப்பாடு ஏற்பட்ட இந்த நிலையில் திருவாளர் சோமசேகரம் அவர்கள் வசதி குறைந்த மக்களுக்கு பல்வேறு உதவிகளைச் செய்திருக்கின்றார்.

அவற்றுக்கெல்லாம் மேலாக இத் தண்ணீர்த் திட்டம் மிக மகத்துவமானது. அதனையிட்டு அவருக்கு நன்றியினைத் தெரிவிப்பதோடு அவர் நீண்ட ஆயுளுடனும் வாழ்ந்து இம் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கின்றேன் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமாகாணசபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கூட்டம் நடத்தப்படாமை குறித்து பெற்றோர் விசனம் தெரிவிப்பு

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நீண்டகாலமாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பனவற்றின் கூட்டம் கூட்டப்படாமை குறித்தும் புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெறாமை தொடர்பிலும் மாணவரின் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பாடசாலைகளில் வருடம் தோறும் இக்கூட்டங்கள் கூட்டப்பட்டு புதிய நிர்வாகத் தெரிவு செய்யப்படுவது நடைமுறையில் உள்ளது.

இந்நிலையில் இப்பாடசாலையில் மட்டும் கூட்டங்கள் நடத்தப்படாமல் இருப்பது கவலையளிப்பதாகவும் இதனால் பாடசாலையின் அபிவிருத்தி சார் செயற்பாடுகள் முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் பெற்றோர் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே இப்பாடசாலையின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு இக்கூட்டங்களை நடத்துவது குறித்து பாடசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பெற்றோர் கேட்டுக்கொள்கின்றனர். (18)

# அழிவுகளுக்கு இட்டுச் செல்லும் மறைவான நிகழ்ச்சி நிரல்



**அரசியல் தீர்வு பற்றி அடிக்கடி பேசுகின்றபோதிலும் அரசியல் தீர்வை நிராகரிக்கும் வகையிலேயே கூட்டமைப்பு செயற்படுகின்றது என்பதை அதன் ஒவ்வொரு நடவடிக்கையிலுமிருந்து அறியக் கூடியதாகவுள்ளது. சரியாகவோ பிழையாகவோ முன்னைய தமிழ்த் தலைமைகள் ஒரு தீர்வை முன்வைத்துத் தங்கள் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவ்வாறு ஒரு தீர்வை முன்வைக்கவில்லை. இவர்களின் தீர்வு தனிநாடா அல்லது அரசியல் தீர்வா என்பது இவர்களுக்கு வாக்களிக்கும் மக்களுக்கே தெரியாது. அரசியல் தீர்வை நிராகரிப்பதற்காகவே இந்த மூடுமந்திர அரசியல்.**

## சங்கர சிவன்

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் தனிநாட்டுக் கோரிக்கை ஒரு கறுப்பு அத்தியாயம். இக் கோரிக்கை நடைமுறைச் சாத்திய மற்றது மாத்திரமின்றி முன்னெடுக்கும் பட்சத்தில் தமிழ் மக்களின் அழிவுக்கு வழிவகுப்பதுமாகும். இதை நடைமுறையில் பார்த்து விட்டோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டையில் தனிநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றிய வேளையில் பல ஆய்வாளர்களும், புலமையாளர்களும் அத் தீர்மானத்தின் பாதக விளைவுகள் பற்றி எச்சரித்தபோதிலும் அன்றைய தமிழ்த் தலைமை அதைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. தமிழரசுக் கட்சிக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்குமிடையே கூட்டணி அமைவது தான் அவர்களின் சிந்தனையில் பிரதான இடம்பிடித்திருந்தது. தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கொள்கையை நீண்ட காலமாக எதிர்த்து வந்த காங்கிரஸ் கட்சியினால் சமஷ்டியைக் கூட்டணியின் கொள்கையாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் வேறொரு கோரிக்கை தேவைப்பட்டது. தனிநாட்டுக் கோரிக்கை சமரச ஏற்பாடாகியது.

சமரச ஏற்பாடாகத் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட போதிலும் அதன் பாதகத் தன்மையை அன்றைய தலைவர்கள் உணராமலில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் பதவியில் இருக்கும் காலங்களில் எதிர்ப்பு அரசியல் நடத்தும் பாரம்பரியத் தொடர்ச்சியாகத் தனிநாட்டுக் கோரிக்கையைத் தீவிரமாக வலியுறுத்தியவர்கள் ஐக்கியதேசியக் கட்சி பதவிக்கு வந்ததும் அக்கோரிக்கையை கைவிட்டு மாவட்ட சபையை ஏற்றார்கள். எனினும் தனிநாட்டுக் கோரிக்கை தவறானது என்று வெளிப்படையாகக் கூறும் திராணி அவர்களுக்கு இருக்கவில்லை. தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து மேற் கொண்ட பிரசாரத்தின் மூலம் உருவாக்கிய சூழ்நிலையின்கைதிகளாக இருந்துகொண்டே தனிநாட்டை நடைமுறையில் நிராகரித்தனர்.

தமிழ்த் தலைமை தனிநாட்டுக் கோரிக்கையை நடைமுறையின் மூலம் மெல்ல மெல்லக்கைவிட்டு வந்த நிலையில் திடீர் மாற்றமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனிநாட்டுக் கோரிக்கையுடனேயே தோன்றியது. மாகாண சபையை மாத்திரமன்றி அதனிலும் மேலான அதிகாரங்களைக் கொண்டிருந்ததும் சமஷ்டி அடிப்படையிலானதுமான பிராந்திய சபையையும் நிராகரிக்கும் நிலைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சென்றது. புலிகளின் மறைவு வரை அவர்களின் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே கூட்டமைப்பு செயற்பட்டது. இந்தத் தவறான செயற்பாட்டுக்குத் தமிழ் மக்கள் மிகப் பெரிய விலை கொடுத்தார்கள். தமிழ் அரசியல் வரலாற்றில் இப்படியான அழிவும் இழப்பும் முன்னொருபோதும் தமிழ் மக்களுக்கு ஏற்படவில்லை. தமிழ் மக்கள் சந்தித்த இந்த அவலங்களுக்குப் புலிகள் எவ்வளவு பொறுப்பாளிகளோ அதே அளவு கூட்டமைப்புத் தலைவர்களும் பொறுப்பாளிகள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்ட முதலாவது நாடாளுமன்றத் தேர்தலுக்காக வெளியிட்ட விஞ்ஞாபனத்தில் புலிகளைத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக அங்கீகரித்ததன் மூலம் தனிநாட்டுப் பாதையில் தமிழ் மக்களை வழி நடத்தியதில் இவர்களும் பொறுப்பாளிகளாக இருந்தார்கள்.

புலிகளின் தோல்விக்குப் பின்னர் அரசியல் தீர்வுக்குத் திரும்புவதாகக் கூட்டமைப்புத் தலைவர்கள் தோற்றம் காட்டியபோதிலும் பழைய நிலைப்பாட்டிலிருந்து அவர்கள் விடுபட்டதாக இல்லை. அரசியல் தீர்வு பற்றி அடிக்கடி பேசுகின்றபோதிலும் அரசியல் தீர்வை நிராகரிக்கும் வகையிலேயே கூட்டமைப்பு செயற்படுகின்றது என்பதை அதன் ஒவ்வொரு நடவடிக்கையிலுமிருந்து அறியக் கூடியதாகவுள்ளது.

சரியாகவோ பிழையாகவோ முன்னைய தமிழ்த் தலைமைகள் ஒரு தீர்வை முன்வைத்துத் தங்கள் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவ்வாறு ஒரு தீர்வை முன்வைக்கவில்லை. இவர்களின் தீர்வு தனிநாடா அல்லது அரசியல் தீர்வா என்பதுஇவர்களுக்கு வாக்களிக்கும் மக்களுக்கே தெரியாது. அரசியல் தீர்வை நிராகரிப்பதற்காகவே இந்த மூடுமந்திர அரசியல்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்மையிலேயே அரசியல் தீர்வில் அக்கறை இருக்குமானால் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்து அதன் அடிப்படையில் மக்களை அணி திரட்டிப் போராட வேண்டும். கூட்டமைப்பு அந்த நடைமுறையைப் பின்பற்றவில்லை. அரசாங்கம் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் எனக் கூறுவதும் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதும் தான் அரசியல் தீர்வு பற்றிய கூட்டமைப்பின் நிலைப்பாடாக உள்ளது.

இனப்பிரச்சினையின் தீர்வுக்காக அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்துபவர்கள் தீர்வுக் கோரிக்கையை முன்வைக்காமல் அரசாங்கமே தீர்வை முன்வைக்க வேண்டும் எனக் கூறுவது அப்பட்டமான கபடத்தனம். அரசாங்கம் எந்தத் தீர்வை முன்வைத்தாலும் அதை நிராகரிப்பதற்கு வசதியாகவே இவ்வாறு கூறுகின்றார்கள். அரசியல் தீர்வில் இவர்களுக்கு அக்கறை இல்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. சர்வதேச சமூகம் பற்றிய இவர்களின் கதைகூட இப்படியானது தான். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறுகின்றார்களேயொழிய என்ன தீர்வைப் பெற்றுத் தரும் என்று சொல்வதில்லை. சர்வதேச சமூகத்தின் மூலம் தீர்வு கிடைக்காது என்பதைத் தெரிந்து கொண்டு மக்களை ஏமாற்றுவதற்காகப் போலியான நம்பிக்கையைத் தோற்றுவிக்கின்றார்கள் என்பதே இதன் அர்த்தம்.

**கூட்டமைப்புத் தலைவர்களிடம் சர்வசன வாக்கெடுப்பு பற்றியோ சிங்கள மக்களின் ஆதரவு பற்றியோ கதையே இல்லை. சிங்கள மக்களை ஆத்திரமூட்டும் விதத்திலும் அவர்களிடம் சந்தேகங்களை வளர்க்கும் விதத்திலுமே பெரும்பாலான கூட்டமைப்புத் தலைவர்கள் பேசி வருகின்றார்கள். இது சர்வசன வாக்கெடுப்பில் அரசியல் தீர்வுக்கு அங்கீகாரம் கிடைக்கக்கூடாது என்ற எதிர்பார்ப்புடனான செயற்பாடு.**

இனப்பிரச்சினையின் தீர்வுக்காக அரசியலமைப்பில் செய்ய வேண்டிய திருத்தங்கள் பற்றி ஆராய்வதற்காக அரசாங்கம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமித்திருக்கின்றது. கூட்டமைப்புத் தலைவர்கள் அரசியல் தீர்வில் அக்கறை உடையவர்களென்றால் தெரிவுக்குழுவில் தங்கள் ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும். இவர்கள் சாக்குப்போக்குச் சொல்லித் தெரிவுக் குழுவை நிராகரிக்கின்றார்கள். அதற்காகக் கூறும் காரணம் சிறுபிள்ளைத்தனமானது. தெரிவுக் குழுவில் ஆலோசனைகளை முன்வைப்பதால் ஒரு பலனும் ஏற்படப்போவதில்லை என்று இவர்கள் கூறுவது தமிழ் மக்கள் அனைவருக்கும் பூச்சுற்றுவதைப் போன்றது. அரசியல் தீர்வில் சிறிதளவேனும் அக்கறை இல்லாததாலேயே தெரிவுக் குழுவை நிராகரிக்கின்றார்கள் என்பது தான் உண்மையான நிலை.

பதின்மூன்றாவது திருத்தத்திலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களைக் கொண்ட அரசியல் தீர்வு சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெற்ற பின்னரே நடைமுறைக்கு வர முடியும். இது தற்போதைய அரசியலமைப்பின் ஒரு ஏற்பாடு. சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெறுவதற்குக் கணிசமான சிங்கள மக்களின் ஆதரவு அவசியம். எனவே, அரசியல் தீர்வில் அக்கறை உள்ளவர்கள் சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். கூட்டமைப்புத் தலைவர்களிடம் சர்வசன வாக்கெடுப்பு பற்றியோ சிங்கள மக்களின் ஆதரவு பற்றியோ கதையே இல்லை. சிங்கள மக்களை ஆத்திரமூட்டும் விதத்திலும் அவர்களிடம் சந்தேகங்களை வளர்க்கும் விதத்திலுமே பெரும்பாலான கூட்டமைப்புத் தலைவர்கள் பேசி வருகின்றார்கள். இது சர்வசன வாக்கெடுப்பில் அரசியல் தீர்வுக்கு அங்கீகாரம் கிடைக்கக் கூடாது என்ற எதிர்பார்ப்புடனான செயற்பாடு.

அரசியல் தீர்வுக்கு எதிரான கூட்டமைப்பின் நிலைப்பாட்டைச் சுருக்கமாக இவ்வாறு கூறலாம்.

தீர்வுத் திட்டம் இல்லை. அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை முன்வைத்துப் போராட்டம் நடத்தும்நோக்கம் இல்லை. அரசியல் தீர்வுக் கோரிக்கையை முன்வைக்காமல் அரசாங்கமே தீர்வொன்றை முன்வைக்க வேண்டுமெனக் கூறுவது. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைக்காமல் நொண்டிச் சாட்டைக் கூறி நிராகரிப்பது. சர்வசன வாக்கெடுப்பில் அரசியல் தீர்வுக்கு அங்கீகாரம் கிடைக்க முடியாத சூழ்நிலையைத் திட்டமிட்டு உருவாக்குவது.


இவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது அரசியல் தீர்வை நிராகரிக்கும் நிகழ்ச்சி நிரலுடனேயே கூட்டமைப்பு செயற்படுகின்றது என்ற முடிவுக்கே வர வேண்டியுள்ளது. கூட்டமைப்புக்கு அரசியல் ஆலோசனையும் நிதியுதவியும் வழங்கும் புலம்பெயர் அமைப்புகளாலேயே கூட்டமைப்பு வழி நடத்தப்படுகின்றது என்பதை இதிலிருந்து விளங்கிக்கொள்ளலாம். இந்தப் புலம் பெயர் அமைப்புகள் தனிநாட்டு இலக்குடன் செயற்படுபவை. இவற்றின் ஆலோசனைக்கு அமைவாகக் கூட்டமைப்பு அரசியல் தீர்வை நிராகரிக்கின்றதென்றால் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலை ஏற்றுச் செயற்படுகின்றது என்பதேஅர்த்தம்.

மக்கள் மீண்டும் அழிவுகளையும் இழப்புக்களையும் சந்திக்கத் தயாராக இல்லை. இது கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியும். எனவே தான் அரசியல் தீர்வுக்காக முயற்சிப்பதாகத்தோற்றம்காட்டிக்கொண்டு தமிழ் மக்களின் கண்ணைக் கட்டி அழிவுப் பாதையில் அழைத்துச் செல்கின்றார்கள்.

இது அழிவுப் பாதை என்பதைப் புரிந்துகொள்வதிலேயே தமிழ் மக்களின் விமோசனம் தங்கியுள்ளது.

# மேற்குலகின் தேவைக்கு ஏற்றபடி எம்மால் செயற்பட முடியாது

## ஜீ.எல்.பீரிஸ் திட்டவட்டம்



(கொழும்பு)

மேற்குலகின் விருப்பு வெறுபபுக்களுக்கு ஏற்ப எம்மால் செயற்பட முடியாது என்பதுடன் அவர்கள் விரும்புவதுபோல் எமது அரசியல் சட்டங்களில் மாறறத்தை ஏற்படுத்திவிட முடியாது.

அத்துடன் மேற்குலக நாடுகளின் தேவைகளுக்காகவும் இலங்கையில் சட்டம் இயற்ற முடியாது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளின் தேவைகளுக்காக துரித கதியில் எம்மால் சட்டங்களை இயற்ற முடியாது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுகின்றன. மனித உரிமை விவகாரம் தொடர்பில் உலகின் அனைத்து நாடுகளும் ஒரே விதமாக நடாத்தப்பட வேண்டும்.

மனித உரிமை விவகாரத்தை ஓர் அரசியல் ஆயுதமாக பயன்படுத்த அனுமதிக்க முடியாது. மனித உரிமை முடக்கப்பட்டிருந்த வடக்கு மக்கள் போர் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் சுதந்திரமான வாழ்க்கை வாழ்கின்றனர்.

எதிர்க்கட்சிகள் குற்றஞ் சுமத்துவதனைப் போன்று நாட்டில் எந்தவொரு இடத்திலும் ஆயுதக் குழுக்கள் இயங்கவில்லை என அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# தபால்மூல வாக்களிப்பு மார்ச் 13 இல் ஆரம்பம்

(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாணசபை தேர்தல் தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 13 மற்றும் 14ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால் மூல வாக்காளர் விண்ணப்ப படிவம் வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் திங்கட்கிழமையுடன் நிறைவடையவுள்ளது. மார்ச் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் வாக்களிக்கத் தவறும் வாக்காளர்கள் மார்ச் 20 ஆம் திகதி அவர்களுக்குரிய மாவட்ட செயலகத்தில் தபால் மூல வாக்கை அளிக்க முடியும் என தேர்தல்கள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஏனைய வாக்காளர் அட்டைகள் மார்ச் மாதம் 4 ஆம் திகதி தபால் நிலையங்களில் கையளிக்கப்படவுள்ளது.

வாக்காளர் அட்டை விநியோகம் எதிர்வரும் மார்ச் 16 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திக்தி வரை இடம்பெறவுள்ளது.

தென் மற்றும் மேல் மாகாண சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மார்ச் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

# நாட்டை பிளவுபடுத்த இன்னமும் முயற்சி நடக்கிறது

## வலுவான தேசத்தை அமைக்க அழைப்பு



(கொழும்பு)

நாட்டை பிளவுபடுத்த சில தரப்பினர் இன்னமும் முயற்சித்து வருவதாக பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கிறிஸ் நோனீஸ் தெரிவித்துள்ளார். நாட்டை ஐக்கியபடுத்துவதனை விடுத்து நாட்டை பிளவுபடுத்த சில தரப்பினர் முயற்சிக்கின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் பல்லின மக்கள் வாழ்வது மிகப்பெரிய பலமாக கருதப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். இனங்களுக்கு இடையிலான பல் வகைமையை பயன்படுத்தி வலுவான தேச மொன்றை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். இலங்கையின் சுதந்திரதினத்தை முன்னிட்டு பிரித்தானியாவில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், பொதுநலவாய செயலக உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மேற்குலகம் மூக்கை நுளைப்பதற்கு இன்றைய அரசே மூல காரணம்

## ஐ.தே.க.அரசு மீது சாடல்

(கொழும்பு)

இலங்கையின் உள் விவகாரங்களில் சர்வதேசம் மூக்கை நுளைப்பதற்கு அரசாங்கமே ஏற்பாடுகளைச் செய்துள் ளது.

அரசாங்கம் விட்ட தவறுகள் காரணமாகவே இப்போது சர்வதேச தலையீடு அதிகரித்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஏன் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என்று அரசாங்கத்திடம் ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் மந்தகதியில் அமுல்படுத்தப்படுவது ஏன் என்று ஐ.தே.க..வின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேச சமூகம் தலையீடு செய்யக் கூடிய பின்னணியை அரசாங்கமே உருவாக்கியுள்ளது என்றும் அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இலங்கை விவகாரத்தில் உலக நாடுகள் தலையீடு செய்வதனை தாம் விரும்ப வில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தினால் சர்வதேச தலையீடுகளை தடுக்க முடியும் என்றும் சஜித் பிரேமதாச, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

# கொலனாவ தொகுதியில் ஒருங்கிணைந்த அபிவிருத்தி

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ், கொலனாவை தேர்தல் தொகுதியின அபிவிருத்திக்காக 353 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி கொலனாவை சிறிலங்கா சுதந்திர கட்சியின் பிரதான அமைப்பாளர், கொலனாவை அபிவிருத்தி குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்தசில்வாவிடம் நேற்றுமுன்தினம் அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் கையளிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வாவின் கண்காணிப்பின் கீழும் முன்னெடுப்பிலும் கொலனாவையில் இடம்பெற்று வரும் திவிநெகும, கிராம எழுச்சி மற்றும் மாகாண எழுச்சி வேலைத்திட்டத்திற்காக இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

பாலம் அமைத்தல், பாடசாலைகளுக்கான வசதி ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டுமான வசதிகள் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படவுள்ளன.

கொலனாவை தேர்தல் தொகுதியில் உள்ள 46 கிராம சேவகர் பிரிவையும் உள்வாங்கும் வகையில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

# தெற்கு தேர்தல் களத்தில் சூடு தேர்தல் விதிமுறை மீறல்களும் தாராளம்

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

தென் மற்றும் மேல் மாகாணங்களில் அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தல் விதிகளை மீறி செயற்படுவதாக தேர்தல் கண்காணிப்புக் குழுக் குற்றஞ் சுமத்தியுள்ளது.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்த தருணத்தில் இருந்து, அரசியல் கட்சிகள் அனைத்தும் இரண்டு மாகாணங்களிலும் இவ்வாறான தேர்தல் சட்டங்களை மீறி செயற்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

காலி நகரில் பொலிஸார் தங்களின் கடமையை செய்யவிடாமல் தடுக்கும் வகையில், சில கட்சி ஆதரவாளர்கள் நடந்துக்கொண்டிருந்தமையை பப்ரல் அமைப்பு இதறகு உதாரணமாக காட்டியுள்ளது.

காலியில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வேட்பாளர் அஜித் பிரசன்ன தேர்தல் சட்டங்களை மீறி செயற்பட்டுள்ளதாக பொலிஸார் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

அவர் உள்ளிட்ட மேலும் ஐந்து பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யத் தீர்மானித்திருப்பதாக பொலிஸார் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு முன்னால் அரசியல் கடசிகள் சில நடாந்துக் கொண்ட விதம் அதிருப்தி அளிப்பதாக பப்ரல் அமைப்பின் நிறை வேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.


கொழும்பு மாவட்ட செயலகத்தில் வேட்பு மனுத் தாக்கல் செய்ததன் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தேர்தல் சட்டங்களை மீறி பேரணி நடத்துவதாக ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர்கள் குற்றஞ் சுமத்தினர்.

இதனைத் தொடர்ந்து அங்கு பதட்ட நிலை ஏற்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் நேர்மையான தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகின்ற அரசியல் கட்சிகள், தங்களின் வேட்பாளர்களது தேர்தல் ஒழுக்கம் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும் என்று பப்ரல் அமைப்புக் கோரியுள்ளது.

# வீண் விரயமாகிறது நிதிவளம் அதிக நிதியில் கப்பல் வராத துறைமுகம்

## ரவி எம்.பி.கிண்டல்



(கொழும்பு)

வீணாண திட்டங்களுக்காக நாட்டின் நிதி செலவிடப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கூறியுள்ளார்.

பலாமரச் சந்தி, ஜயந்தி வித்தியாலயத்தின் கழிவறை கட்டமைப்பை புனரமைத்து குழாய் நீர் வசதியை பெற்றுக்கொடுக்கும் முகமாக நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ரவி கருணாயாகக்க இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் நாட்டின் நிதியை வீணடித்து போலியான வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படுவதை நினைத்தால் கவலையாகவுள்ளது. கப்பல் வராத துறைமுகத்திற்கு நிதி ஒதுக்குகின்றனர். விமானங்கள் வராத விமான நிலையங்களுக்கு நிதி ஒதுக்குகின்றனர்.

ஆனால் அந்த நிதியை பயன்படுத்தி இவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கப்படாமையையிட்டு எமக்கு கவலையாகவுள்ளது.

இதேவேளை, இம்முறை மாகாண சபைத் தேர்தலில் மக்களின் ஆதரவு தமது கட்சிகளு இருப்பதாக ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகக் கட்சியின் கம்பஹா மாவட்டத்திற்கான தேர்தல் பிரசாரங்களுக்கு முன்னோடியாக களனி ரஜமஹா விஹாரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மத அனுஷ்டாங்களின் பின்னர் சரத் பொன்சேகா இந்த கருத்தினை கூறினார்.

அத்துடன் மேல் மற்றும் தென் மாகாண சபை தேர்தல்களுக்கு ஜனநாயகக் கட்சி முதல் தடவையாக களமிறங்கியுள்ளது. எனவே இந்த தேர்தலில் மக்களின் ஆதரவு எமக்கு உள்ளது. சிறந்த இரண்டு குழுக்களை களமிறக்கியுள்ளோம். தென் மற்றும் மேல் மாகாணத்தில் வலுவான குழுவை நிறுத்தியுள்ளோம். அவரகள அனைவரும் குற்றமற்ற நபர்கள். இவர்களுக்கு ஆசிர்வாத்தத்தை பெற்றுக்கொடுக்க இங்கு வந்துள்ளோம். இதனை நாடளாவிய ரீதியில் கொண்டு செல்ல எதிர்வரும் நாட்களில் செயற்படுவோம். எமக்கு வெற்றி உறுதி.

ஜனநாயகக் கட்சியின் பிரதித் தலைவர் ஜயந்த கெடகொட, மேல் மாகாண சபை வேட்பாளர் சுசில் கிந்தல்பிட்டிய மற்றும் கம்பஹா மாவட்ட வேட்பாளர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# மின்சார சபைக்கு சோதனைக்காலம்

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் இலங்கை மின்சார சபை 8 ஆயிரத்து 900 மில்லியன் ரூபாய் நட்டத்துக்கு முகம் கொடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய மின்சார பாவனை இயக்கம் இதனைத் தெரிவித்துள்ளது. நுரைச்சோலை அனல் மின்னிலையம் ஸ்தம்பிதமடைந்துள்ளமையே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.



ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட என்.டி.பி.நிறுவனத்தின் நோர்வே இலங்கை பிரதிநிதி டக்னி, கொழும்பு பிரதிநிதி வித்தியா பெரேரா உள்ளிட்ட பிரதிநிதிகள் அண்மையில் காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு வருகை தந்தனர். இதன்போது அங்கு சிறிய மிகு குளிரூட்டி கடலுணவுகளை களஞ்சியப்படுத்தும் இயந்திரத்தை திறந்துவைத்து பிரதிநிதிகள் பார்வையிடுவதையும், கடுவாடு பதனிடல் குறித்து பயிற்சியளிப்பதையும், பயிற்சிபெற்ற பெண்ணுக்கு சான்றிதழ் வழங்குவதையும் காணலாம். (50)

# சக மாணவர்களுடனான ஒற்றுமையுணர்வு கல்வியின் உயர்வுக்கு வழிவகுக்கும்

## வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா



(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்கள் தங்களுடன் கல்விகற்கும் சக மாணவர்களுடைய குறைகளைக் கண்டு அவர்களை ஒதுக்கிவிடாது அவர்களையும் கல்வி மற்றும் விளையாட்டிலும் சேர்த்து ஈடுபடுத்த வேண்டும் என வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா தெரிவித்தார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் 110ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும் அண்மையில் கல்லூரியில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரியின் முதல்வர் கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இயற்கை அன்னைக்கு எதிராக நாங்கள் செயற்படத் தேவையில்லை. செயற்படவும் முடியாது. இதை மனதில் கொண்டு மாணவர்கள் தங்களுடன் கல்வி கற்கும் சக மாணவர்களுடன் ஒற்றுமையாக இருக்கவேண்டும். மேலும் ஆரம்பகாலத்தில் எல்லா மாணவர்களும் சேர்ந்து கல்லூரி கீதத்தை பாடுவார்கள் ஆனால் இன்று பல பாடசாலைகளில் அவ்வாறில்லாது மூன்று மாணவர்கள் ஒலிவாங்கிக்கு முன்னால் நின்று பாட ஏனைய மாணவர்கள் அசமந்தமாக நின்று கொண்டிருக்கின்றனர் ஏன் இவ்வாறான ஓர் நிலைமை. எனவே எல்லா மாணவர்களும் சேர்ந்து கல்லூரிக்கீதத்திற்கு மதிப்பளித்து இசைக்க வேண்டும். ஒற்றுமையுடனான செயற்பாடே கற்றலுக்கு முக்கியமானதாகும் என அவர் தெரிவித்தார்.

இந் நிகழ்விற்கு வட மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, வலயக்கல்விப் பணிப்பாளர் கிருஸ்ணகுமார் ஏனைய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் கலந்துகொண்டனர். (48)

## நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கியக் குவியத்தின் ஏற்பாட்டில் நெற்கொழுதாசனின் ரகசியத்தின் நாக்குகள் நூல் வெளியீட்டுவிழா இன்று மாலை 3 மணிக்கு நிலாந்தன் தலைமையில் திருமறைக்கலா மன்ற கலைத்தூது மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நூலின் வெளியீட்டுரையினை கவிஞர் சோ.பத்மநாதன், விமர்சன உரைகளினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதம நூலகர் ஸ்ரீகாந்தலட்சுமி, கரைச்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீபன், எழுத்தாளர் பெரியஐங்கரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளார்கள்.

இந் நிகழ்வில் யாழ்.இலக்கிய குவியத்தின் கீதம் அறிமுக நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

# கைகளின் அசைவுகளில் வெளிப்படும் உண்மைகள்

## அழுத்தமான மனிதர்

ஒருவர் பெரும்பாலும் தன்னுடைய கைவிரல்களை நன்றாக இறுக்கி மூடிக்கொண்டே நிற்பார் அல்லது நடக்கின் அவர் மிகவும் அழுத்தமானவர் என்பதை அறிய முடியும். இவரை எவரும் இலகுவில் ஏமாற்றி விட முடியாது. இவரும் பிறரை ஏமாற்ற நினைக்கமாட்டார். ஆனால் தன்னைச் சூழ்ந்துள்ள எல்லோரையுமே சிறிது சந்தேகக் கண்கொண்டு நோக்குவார். சந்தேகக்கோடு சந்தோஷக்கேடாகி அடிக்கடி மனமுடைந்து வேதனைப்படுவார். எவரிடத்திலும் முழுமையான நம்பிக்கை வைக்க மனம் ஒருமைப்படாது. இயற்கையாகவே இவர் மன உறுதிபடைத்தவர். ஒருமுடிவிற்கு வந்து விட்டால் அதைமாற்ற எவராலுமே முடியாது. கூடுமான வரையில் எக்காரியத்திலும் பிறருடைய உதவியை நாடாமல் வாழ்வதற்கே பாடுபடுவார். அதேபோல் தன்னிடத்திலும் பிறர் உதவிகேட்டு வருவதை இவர் விரும்பமாட்டார். பிறருடைய விருப்பத்திற்காகத் தனக்குப்பிடிக்காத ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு இவர் ஒருபொழுதும் உடன்படமாட்டார்.

பணவிடயத்தில் இவர் மிகமிக நாணயமாக நடக்கத்தலைப்படுவர். தன்னைப்போலவே மற்றவர்களும் தன்னிடம் நாணயமாக நடந்து கொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பர். அப்படி நடந்து கொள்ளாதவர்களிடம் இவர் மேற்கொண்டு தொடர்பு வைத்துக்கொள்ளமாட்டார். வீண் பொழுதைப்போக்கார். அவர் பொழுதையும் தவப்பொழுதாக்கிக் கொள்வார். தனக்குத் தொடர்பில்லாத காரியங்களில் தலையிடார். எப்பொழுதும் தன்னுடைய தேவைக்கு மேற்பட்ட சிறிது பணவசதி படைத்தவராகவே காணப்படுவார். எனினும் அதற்காக வீண் செலவுகள் செய்யமாட்டார். மிகவும் சிக்கனப் பேர்வழி. இவருடைய நண்பர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் உண்மையானவர்களாக நம்பிக்கைக்குரியவர்களாகத் திகழ்வார்கள். இவருடைய பேச்சில் கண்டிப்பும், விட்டுக்கொடுக்காத மன அழுத்தமும் இருக்கும். பேச்சில் கம்பீரம் தொனிக்கும்.

(தொடரும்)

ஜோதிர் வித்யா ரத்னா
V.A.சிவராசா,
[B.A.B.Phil.Dip - in -Ed]

# பொதுக்கூட்டம்

(கரணவாய்)

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு உறுப்புரிமைச் சங்கங்களின் பிரதிநிதிகள் அனைவரையும் குறித்த நேரத்திற்குத் தவறாது சமூகமளிக்குமாறு சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (18)

# முரசின் இன்றைய பலன்



(09.02.2014 ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் தை மாதம் 27 ஆம் திகதி.
தசமி / சித்தம்.ரோகினி நட்சத்திரம் பி.ப. 02.04 வரை.
பின் மிருகசீரிடம்.
இராகு காலம் 05.05 - 06.35 வரை. சுபநேரம் 09.35 - 11.05 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — பாராமுகமாக இருந்துவரும் சகோதர உறவை நினைத்து மனத்துயர் அடைதல், பணிசிறக்க சக ஊழியர்களை உற்சாகப்படுத்தல்.

**ரிஷபம்** — சீசர் செய்து குழந்தை பிரசவம் செய்யும் நிலைமாறி இயற்கையாக இருந்ததால் மகிழ்வடைதல், வெளியூர் உறவினர் வருகைதருவதினால் ஆனந்தம்.

**மிதுனம்** — அரசியல் பற்றிய விமர்சனத்தால் வாக்குவாதம் மேலோங்கி நட்புக்கெட்டுவிடல், பொருட்களைக் கொள்வனவு செய்ய பயண முயற்சி.

**கடகம்** — பணியகத்தில் முரண்பாடு தோன்றி ஸ்தம்பித நிலை தக்க வைத்தல், மார்புச்சளிநோய் தொடர்ந்தும் வருந்தல்.

**சிம்மம்** — விதிகளை மீறியமையினால் தண்டம் பெறல், அனுமதி கிட்டியதினால் வேலைவாய்ப்பு பெறுதல்.

**கன்னி** — காதலில் ஏற்பட்ட சோதனை, வேதனை விலகிவிடல், பிதாவின் உதவியினால் வாகனம் கிட்டுதல்.

**துலாம்** — விவாகத்திற்காக வெளியூர் செல்ல முஸ்தீவு, சொத்துப் பிரச்சினை மேலோங்கியதால் முரண்பாடு.

**விருச்சிகம்** — மக்களைக் கண்டிக்க முயலாது நியாயத்தை எடுத்துரைத்தல், ஏழரைச்சனி இருப்பதினால் மனையமைக்கும் யோசனையைக் கைவிடல்.

**தனுசு** — பரீட்சையில் சித்தியடைந்தும் நேர்முகத்தேர்வின் பின்னர் வரவிருந்த பதவிகாலைவாரி விடுதல், அலைச்சலும் வேளைதப்பிய போஜனமும் தக்க வைத்தல்.

**மகரம்** — ஆயுதங்களினால் காயம் ஏற்படும் அபாய நிலை, பிரிந்திருந்த உறவு மீண்டும் கைகொடுத்தல்.

**கும்பம்** — நீண்டநாள் இழுபட்ட நிலுவை கிடைக்கும் அறிகுறி ஏற்படல், புதிய யுக்தியைக் கையாண்டு தேங்கிய பொருட்களை விற்கும் நிலைப்பாடு.

**மீனம்** — நாவைக்காக்காத பழியினால் பின்விளைவு பற்றி அச்சநிலைதக்கவைத்தல், எளிதாக முடிக்கலாம் என எண்ணிய பணி சுமைபோலத் தோற்றமளித்தல்.

# சுருண்டது நியூசிலாந்து இந்தியாவுக்கு இலக்கு 407



நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 407 என்ற வெற்றியிலக்கை நோக்கி ஆடி வருகின்றது.

இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் நியூசிலாந்தின் ஒக்லாண்ட்டில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை இந்திய அணி தொடர்ந்தது. நியூசிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய இந்திய அணி ஏனைய ஆறு விக்கெட்டுக்களையும் 72 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்தது. இறுதியில் இந்திய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும்இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரோகித் சர்மா 72, ஜடேஜா ஆட்டமிழக்காது 30, ரஹானே 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் போல்ட், ரிம் சௌத்தி ஆகியோர் தலா மூன்று, அண்டர்சன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

301 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய நியூசிலாந்து அணி, இந்திய வேகப்பந்து வீச்சாளர்களின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இதில் ஒரு முனையில் அனுபவ வீரர் ரெய்லர் தாக்குப் பிடித்தபோதும், மறுமுனையில் விக்கெட் சரிவை எவராலும் நிறுத்த முடியவில்லை. இறுதியில் நியூசிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் ரெய்லர் 41, ரிம் சௌத்தி 14, வைட்லிங் 11 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் மொகமட் சமி, இசாந்த் சர்மா ஆகியோர் தலா மூன்று, சகீர்கான் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

407 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் இந்திய அணிநேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது ஒரு விக்கெட்டை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தாவன் 49, புஜாரா 22 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதுள்ளனர். ஒன்பது விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இந்திய அணிக்கு வெற்றி பெற இன்னும் 320 ஓட்டங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இன்று போட்டியின் நான்காம் நாளாகும். நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 503.



## செரீனா விலகல்

(துபாய்)

கட்டார் ஓப்பன் மற்றும் இந்தியன் வெல்ஸ் ரென்னிஸ் போட்டித் தொடர்களிலிருந்து உலகின் முதல் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் விலகியுள்ளார்.

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் கலந்து கொண்ட செரீனாவுக்கு ஏற்பட்ட காயம் காரணமாக அவர் ஓய்வு எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனை அடுத்து நாளை கட்டார் நாட்டின் டோகாவில் நடைபெறவுள்ள கட்டார் ஓப்பன் போட்டியிலும் மற்றும் மார்ச் மாதம் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை கலிபோர்னியா மாகாணம் இந்தியன் வெல்சில் நடைபெறும் பரிபோஸ் ஓப்பன் ரென்னிஸ் போட்டியிலும் கலந்து கொள்வதில்லை என்ற முடிவை அவர் நேற்று அறிவித்துள்ளார்.

இது குறித்து செரீனா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், இவ்வருடம் நடைபெறும் பரிபோஸ் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் பங்கேற்பது குறித்து கவனமுடன் பரிசீலனை மேற்கொண்டு பின்னரே போட்டியில் இருந்து விலகுவது என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. போட்டிகளில் பங்கேற்கும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

## சங்கா மூன்றாமிடம்

(சிட்டகொங்)

பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் சங்கக்கரா மொத்தம் 424 ஓட்டங்கள் (319, 105) குவித்துள்ளார். இதன் மூலம் ஒரு டெஸ்டில் மொத்தமாக அதிக ஓட்டங்கள் எடுத்தவர்களின் வரிசையில் சங்கக்கரா 3ஆவது இடத்தில் இருக்கிறார்.

இந்த வகையில் இங்கிலாந்தின் கிரஹாம் கூச் 456 ஓட்டங்களுடன் (1990ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிராக 333 மற்றும் 123 ஓட்டங்கள்) முதலிடத்திலும், அவுஸ்ரேலியாவின் மார்க் ரெய்லர் 426 ஓட்டங்களுடன் (1998ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக 334* மற்றும் 92 ஓட்டங்கள்) 2ஆவது இடத்திலும் உள்ளனர்.

இதேவேளை, மூச்சதம் உட்பட பல சாதனை படைத்த சங்கக்காரவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொலைபேசி ஊடாக வாழ்த்துத் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கை அணியின் முன்னாள் வீரர்கள், சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் எனப்பலர் சங்கக்காரவைப் பாராட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணம் வென்றது பேர்த்



(பேர்த்)

பிக்போஷ் ருவென்ரி-20 தொடரின் வெற்றிக் கிண்ணத்தை பேர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

அவுஸ்ரேலியாவில் நடைபெறும் உள்ளூர் போட்டிகளில் ஒன்றான, மூன்றாவது பிக்போஷ் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி, பேர்த்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், பேர்த் ஸ்கார்ச்சர்ஸ், ஹோபர்ட் ஹரிகேன்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பேர்த் அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஷோன் மார்ஷ் 43 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 63, எம். மார்ஷ் 37, சிம்மன்ஸ் 45, ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 192 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஹோபர்ட் ஹரிகேன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஜோர்ஜ் பெய்லி 32 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிகஸர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 58 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்த வெற்றியின் மூலம், பிக்போஷ் ருவென்ரி-20 லீக் தொடரில் பேர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி முதன்முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

இதன் மூலம் பேர்த் ஸ்கார்ச்சர்ஸ் மற்றும் ஹோபார்ட் ஹரிகோன்ஸ் அணிகள் சம்பியன் லீக் ருவென்ரி-20 தொடருக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிட்டகொங் டெஸ்ட் சமநிலை; தொடர் இலங்கை வசம்

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக் கிடையிலான சிட்டகொங் டெஸ்ட் போட்டி சமநிலையில் நிறைவு பெற்றது. இதன் மூலம் டெஸ்ட் தொடரை இலங்கை அணி 1-0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது.

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று பங்களாதேஷின் சிட்டகொங்கில் நிறைவடைந்தது.

இலங்கை அணி முதல் இனிங்ஸிற்காக 587 ஓட்டங்களையும், பங்களாதேஷ் அணி முதல் இனிங்ஸிற்காக 426 ஓட்டங்களைப் பெற்றன. இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 305 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

பதிலுக்கு 467 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய பங்களாதேஷ் அணி நேற்றைய இறுதி நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை மூன்று விக்கெட்டுக்களை இழந்து 271 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் மொமினுல் ஹக் மிகவும் சிறப்பாக ஆடி சதம் கடந்தார். 167 பந்துகளை எதிர்கொண்ட மொமினுல் ஹக் 11 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் மொமினுல் ஹக் பெற்றுக்கொண்ட மூன்றாவது சதமாக இது அமைந்தது. மற்றும் தமிம் இக்பால் 31, ரஹ்மான் 45, கைல் 25, ஷகிப் அல் ஹசன் 43 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எம். பெரேரா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் இப்போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. இதனால், இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை இலங்கை அணி 1-0 என்ற நிலையில் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை குமார் சங்கக்கார பெற்றுக்கொண்டார்.



# விளையாட்டுத் திறனை அதிகரிக்க கிளிநொச்சியில் இரு குழுக்கள் உதயம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் விளையாட்டுத் திறனை அதிகரிக்கும் வகையில் விளையாட்டு அபிவிருத்திக் குழு மற்றும் ஒழுக்காற்றுக் குழு என இரண்டு குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டு விளையாட்டுத்துறையின் அபிவிருத்தியை மேற்கொள்ளல் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடந்த ஆறாம் திகதி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, 15 பேர் அடங்கிய மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்திக் குழு, 7 பேர் அடங்கிய மாவட்ட மட்ட விளையாட்டு ஒழுக்காற்றுக் குழு என்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில், மேலதிக அரசாங்க அதிபர் செல்லமுத்து ஸ்ரீநிவாசன், மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி செ.சதானந்தன், விளையாட்டுத்துறை அமைச்சின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் இ.அனுராகாந்தன், கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலகங்களின் விளையாட்டுத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கையில், 2014 ஆம் ஆண்டு தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கு கிளிநொச்சி மாவட்ட வீர,வீராங்கனைகளை தயார் செய்யும் நோக்குடனும், அவர்களுக்கான பயிற்சிகளையும் போசாக்கு உணவு வகைகளையும் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இவ் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன.

மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்திக் குழுவினர் விளையாட்டுத் துறையினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், இவர்கள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் நிதி சேகரிக்கும் பணியில் விரைவில் ஈடுபடவுள்ளனர். அத்துடன், மாவட்ட மட்ட விளையாட்டு ஒழுக்காற்று குழு விளையாட்டுத் துறையில் ஏற்படும் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வினை பெற்றுக்கொடுக்கும் வகையில் இயங்கவுள்ளது என்று தெரிவித்தார்.

## இளைஞர் சம்மேளனம் சங்கானையில் அங்குரார்ப்பணம்

(சங்கானை)

சங்கானைப் பிரதேச இளைஞர் சம்மேளன அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த முதலாம் திகதி வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

பிரதேச இளைஞர் சம்மேளனத் தலைவராக ரேக பாகர், செயலாளராக மதன்ராஜ், பொருளாளராக ஜீவப் பிரகாஸ், ஏற்பட்டாளராக சுஜீவன், உப செயலாளராக நிர்த்தனவேல், கல்வி மற்றும் பயிற்சி பொறுப்பாளராக வசந்தினி, உப ஏற்பட்டாளராக கோடன், ஊடகம் மற்றும் தகவல் பொறுப்பாளராக தயாளபாலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பிரதேச மட்டத்திலுள்ள இளைஞர்களின் விளையாட்டுச் செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்யும் பல தீர்மானங்களும் இதன்போது ஆராயப்பட்டது.

இதில் வளர்ந்து வரும் வீர,வீராங்கனைகளை இனங்காண் பது தொடர்பாகவே அதிகம் விவா திக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (93)

## யங்கம்பன்ஸ், கரவை சுடர் முன்னேற்றம்

(பருத்தித்துறை)

வல்வை விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு யங்கம்பன்ஸ், கரவை சுடர் அணிகள் முன்னேறியுள்ளது.

பருத்தித்துறை கால்ப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன், வல்வை விளையாட்டுக் கழகம் நடாத்தும் விலகல் முறையிலான கால்பந்துச் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் வல்வை ரெயின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் முதல் ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியும், பொலிகை பாரதி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யங்கம்பன்ஸ் அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெறவிருந்த இரண்டாவது போட்டியில் கரவை சுடர் அணியும் அல்வாய் நக்கீரன் அணியும் மோதவிருந்தன. இதில் அல்வாய் நக்கீரன் அணி சமூகமளிக்காததன் காரணமாக கரவை சுடர் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இரசிகர்களை திருப்திப்படுத்தும் வகையில் சிநேகித பூர்வ போட்டி ஒன்று நடாத்தப்பட்டது. இதில் வல்வை அணியும், கரவை சுடர் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் வல்வை அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை, இன்றைய தினம் நடைபெறவுள்ள ஆட்டத்தில் கலட்டி அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் அணியும் , அல்வாய் நண்பர்கள் அணியை எதிர்த்து சென்பீற்றர்ஸ் அணியும் மோதவுள்ளன.

இப்போட்டியில் வெற்றியீட்டும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என்றும், ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருதுகளும் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

## கரைச்சிப் பிரதேச பெரு விளையாட்டு சம்பியன் பட்டம் வென்ற அணிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக நடைபெற்ற பெரு விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

கரப்பந்து, வலைப்பந்து, கால்பந்து, எல்லே, கபடி,மென்பந்து கிரிக்கெட் போன்ற பல போட்டிகள் அண்மையில் மைதானங்களில் நடைபெற்றன.

பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் புதிய பாரதி அணியும், விபுலானந்தா அணியும் மோதின. இதில் புதிய பாரதி அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் புதிய பாரதி அணியும், இளம்தென்றல் அணியும் மோதின. இதில் புதிய பாரதி அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணியும், வட்டக்கச்சி இளம்தென்றல் அணியும் மோதின. இதில் லக்கிஸ்ரார் அணி 29-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் உருத்திரபுரம் அணியும் திருநகர் அணியும் மோதின. இப்போட்டி சமநிலையில் நிறைவுற்றதால் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் உருத்திரபுரம் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று பிரதேச மட்ட சம்பியனானது.

பெண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் உழவர் ஒன்றிய அணியும் ஜெயந்திநகர் மகாதேவா அணியும் மோதின. இதில் உழவர் ஒன்றிய அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

ஆண்களுக்கான எல்லே போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் புதுமுறிப்பு உதயசூரியன் அணியும், உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் அணியும் மோதின. இதில் உதயசூரியன் அணி 5-2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனானது.

பெண்களுக்கான எல்லே போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் ஜெயந்திநகர் மகாதேவா அணியும், உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் அணியும் மோதின. இதில் மகாதேவா அணி 1-0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆண்களுக்கான கபடிப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் அணியும், வட்டக்கச்சி குறிஞ்சி அணியும் மோதின. இதில் உழவர் ஒன்றியம் அணி 81-35 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது.

பெண்களுக்கான கபடிப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் உழவர் ஒன்றியம் அணியும், ஜெயந்திநகர் மகாதேவா அணியும் மோதின. இதில் உழவர் ஒன்றியம் அணி 56-12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் தொடரின் சம்பியன் பட்டத்தை புதுமுறிப்பு உதயசூரியன் அணி கைப்பற்றியது. இரண்டாமிடத்தை சென்தணல் அணி பிடித்துக் கொண்டது.

பெண்களுக்கான மென்பந்து தொடரில் முதலாமிடத்தை மகாவேதா அணியும், இரண்டாமிடத்தை உருத்திரபுரம் உழவர்ஒன்றியம் அணியும் பிடித்துக்கொண்டது. இப்போட்டிகள் அனைத்தும் கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் எஸ். குமார் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (93)



நெடுந்தீவுப் பிரதேச மட்ட பெண்களுக்கான எல்லே போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக்கொண்ட அன்ரனீஸ் யூத் அணியைக் காணலாம். இப்போட்டியில் உதயசூரியன் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## வேலணையில் இன்று தாச்சி

(வேலணை)

வேலணைப் பிரதேச செயலக விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்த வகையில் ஆண்களுக்கான தாச்சிப் போட்டி இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.இப்போட்டியில் பங்குகொள்ளவுள்ள அணிகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் யசிதரன் கேட்டுள்ளார். (93)

**'சாத்திரி' எனப்படும் ஸ்ரீகௌரிபால் புலிகளின் சர்வதேசப் பிரிவின் முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்தவர். ஆரம்பத்தில் புலிகள் அமைப்பில் வெடி பொருள் பிரிவில் பணியாற்றியதால் 'சக்கை சியாம்' என அழைக்கப்பட்டவர். தற்சமயம் 'சாத்திரி' என்கிற புனைபெயரில் எழுத்துலகில் அறியப்படுபவர்.**

**பேட்டி கண்டவர்: அருளினியன்**

3



# சாத்திரி பேசுகிறேன்

**விடுதலைப் புலிகள் அமைப்பிற்காக நீங்கள் நேரடியாக எத்தனை கொலைகள் செய்துள்ளீர்கள்?**

ஏனிந்த கொலை வெறிக் கேள்வி?, நான் எனக்காக எந்தக் கொலையையும் செய்திருக்கவில்லை. நான் செய்த கொலைகள் அனைத்துமே நான் சார்ந்து இயங்கிய அமைப்பிற்காகவே செய்யப்பட்டன. நான் நேரடியாக செய்த கொலைகள் இந்திய அமைதிப் படைக் காலத்தில்தான் நடந்தன. இந்தியப் படைகளிற்கு எங்களை அல்லது நாங்கள் பதுங்கியிருக்கும் இடங்களை, எங்களிற்கு உணவளித்து எம்மை பாதுகாத்தவர்களை காட்டிக் கொடுத்து இந்தியப் படைகளோடு சேர்ந்து இயங்கியவர்களை அழிக்க வேண்டிய தேவை இருந்தது. அப்படி எனது பொறுப்பில் இருந்த கிராமங்களில் பதினைந்து அல்லது பதினாறுபேர் என்னால் நேரடியாக அழிக்கப்பட்டிருக்கலாம்.

**ஒரு உயிரைப் பறிக்கும் உரிமையை, உங்களின் வார்த்தைகளில் சொன்னால் அழிக்கப்பட வேண்டியவர்களை அழிக்கும் உரிமையை விடுதலையின் பெயரில் நீங்கள் எடுத்துக் கொண்டது சரியா?**

நான் இணைந்திருந்தது ஆயுதத்தால் மட்டுமே பேசத் தெரிந்த ஒரு அமைப்பு. அங்கு பட்டையும் கொட்டையும் (உருத்திராட்சம்) அணிந்து கொண்டு பஜனை பாட முடியாது. ஆயுதத்தை வைத்து ஆராதனை செய்துகொண்டிருக்க முடியாது. ஆயுதம் தூக்கிய இயக்கம் மட்டுமல்ல ஆயுதம் தூக்கிய ஒரு தனி மனிதன் ஆனாலும் அடுத்தது வன்முறை அல்லது கொலை தான். இது உலக நியதி. உலகம் இப்படித்தான் இயங்குகிறது. சரி பிழை என்பதெல்லாம் அடுத்த கட்டம்.

**ஆகவே நீங்கள் கொலைகளை ஆதரிக்கிறீர்களா?**

இல்லை யாருடைய உயிரையும் எடுக்கும் உரிமை எவருக்கும் இல்லை. மரண தண்டனை உட்பட. ஆனால் என்னை ஒருவன் கொல்ல வரும்போது அதனை எதிர்த்துப் போராட வேண்டிய தேவை எனக்குண்டு அல்லவா?

**நீங்கள் நேரடியாக செய்த ஒவ்வொரு கொலையையும் விபரிக்க முடியுமா?**

இது மனம் விட்டு விபரிக்கிற ஒரு சம்பவம் அல்ல. மேரசமான ஆனால் விரும்பியோ விரும்பாமலோ தவிர்க்க முடியாத சம்பவங்கள். ஒருவரை போட வேண்டும் (கொலை செய்யவேண்டும்) என முடிவு செய்து விட்டால் அவரைப் பற்றிய தகவல்கள் அவரது நடமாட்டம் என்பவற்றை திரட்டுவோம். பின்னர் ஒரு கணத்தில் ஒரு துப்பாக்கிக் குண்டு அவரது தலையைப் பிளக்கும் அவ்வளவுதான். சில நேரங்களில் தவறுதலான தகவல்களால் தவறுகளே செய்யாதவர்களும் தவறான முறையில் புலிகளால் கொல்லப்பட்ட சம்பவங்களும் நடந்திருக்கின்றது.

**ஒருவரை கொலை செய்யும் கணத்தில் உங்கள் மன நிலை எப்படி இருக்கும்?**

ஆரம்பத்தில் கொஞ்சம் சங்கடமாகத்தான் இருந்தது சங்கடத்தை அல்லது பதற்றத்தை போக்க மது அருந்தவேண்டியிருந்தது (கள்ளு) பின்னர் போகப்போக பழகிப்போனது.

**விடுதலைப் புலிகள் மது அருந்த மாட்டார்கள் என கூறுவார்களே?**

புலிகள் அமைப்பில் மது அருந்தக்கூடாது புகைப் பிடிக்கக்கூடாது என்பது ஒரு பொதுவான விதிதான். பிரபாகரன் தேனீர், கோப்பி கூட அருந்தமாட்டார். ஆனால் பல முன்னாள் போராளிகள் இதில் விதி விலக்காக இருந்தார்கள். களவாக புகைபிடிக்கவும் மது அருந்தவும் செய்தார்கள். போராளிகளிடையே சிகரெட்டிற்கு "சயன்ஸ்" என்கிற சங்கேத மொழி கூட இருந்தது. நான் முதலாவதாக காயமடைந்த அன்று வடமராச்சி பகுதியில் நாங்கள் பதினைந்து பேர் பல நூறு இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தோம். அன்று முழுதும் எமக்கு உணவு கிடைக்கவில்லை தென்னையில் இருந்து இளநீரைக் குடித்து தேங்காயை சாப்பிட்டதுடன் பனையில் இருந்து கள்ளையும் இறக்கிக் குடித்திருந்தோம். அன்றிரவு முற்றுகையை தகர்த்து வெளியே வரும் போது எமது போராளிகளில் பலர் இறந்து போனார்கள். நான் கடுமையாக காயமடைந்திருந்தேன். போதையில் இருந்ததனால் அதிகளவு இரத்தம் வெளியேறியதால் மயக்கமடைந்திருந்தேன்.

**நீங்கள் நேரடியாக சம்பந்தப்படாமல் மறைமுகமாக சம்பந்தப்பட்ட கொலைகள் எத்தனை?**

கண்ணி வெடிப் பிரிவில் இருந்ததனால் கண்ணி வெடியை வைத்து அடிச்சிட்டு போய்க் கொண்டே இருக்கவேண்டியது தான். கணக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

**உங்கள் உயிர் நண்பனை கொலை செய்ததாக ஒரு முறை கூறியிருந்தீர்கள், அந்தக் கணத்தில் உங்கள் மனநிலை எப்படி இருந்தது?**

ஆம். அவன் எனது சிறு வயது நண்பன். அவனை நானே கொலை செய்தேன். அவன் வேறு இயக்கத்தில் இணைந்திருந்தான். புலிகள் அமைப்பால் அந்த இயக்கம் தடை செய்யப்பட்ட பின்னர் இந்தியாவில் தங்கியிருந்தவன் இந்தியப் படைகள் ஈழத்திற்கு வந்தபோது அவனும் இந்திய உளவமைப்பால் ஈழத்திற்கு அழைத்து வரப் பட்டிருந்தான். அவனை நோக்கி துப்பாக்கி நீண்டது ஒரு கணத்தில் நான் எடுத்த முடிவு. ஏனெனில் கொல் அல்லது கொல்லப் படுவாய் என்கிற கால கட்டம் அது. ஆனால் அந்தக் கொலையால் எனது மனதில் உள்ள தாக்கம் என் மரணம் வரை தொடரும். அய் மிஸ் ஹிம்.

**நீங்கள் செய்த கொலைகளுக்காக எப்போதாவது வருந்தியிருக்கிறீர்களா?**

தம்பி! ஒரு முக்கியமான விடயம். கொலைகள் எவையுமே எனது தனிப்பட்ட காரணங்களிற்காக செய்யப் பட்டது அல்ல. நான் செய்த கொலைகள் எல்லாமே ஒட்டு மொத்த ஈழத் தமிழ் மக்களின் விடுதலை என்று உதித்த, அந்த மக்களின் பிரதிநிதிகள் என்று செயற்பட்ட ஒரு அமைப்பின் உறுப்பினராக இயங்கிய எனக்கு வழங்கப்பட்ட கட்டளைகளாகும். ஒரு இராணுவமாகட்டும், ஆயுத குழுவாகட்டும் கட்டளைக்கு கீழ்ப்படிதல் என்பது மிக முக்கியமானது. அதன்படி எனக்கான கட்டளைகளிற்கு நான் கீழ்ப்படிந்து இயங்கினேன். கொலைகள் என்பன எனக்கு வழங்கப்பட்ட கட்டளைகள். ஆனால் குற்ற உணர்வு என்பது இருக்கத்தான் செய்கின்றது. தினமும் அதற்காக வருந்திக் கொண்டுதான் இருக்கிறேன்.

(தொடரும்)

# ராசியில்லாத ராணி!



பதினாறாவது வயதில் "ஹம் பாஞ்ச்" என்ற டி.வி. தொடரின் மூலம் அறிமுகமானேன். திரையுலகில் நுழைய வேண்டுமென்ற ஆவலில் தென்னிந்தியாவுக்கு வந்தபோது எதிர்பார்த்த வரவேற்பு கிடைக்கவில்லை. வாய்ப்பு கிடைத்த படங்களும் தொடங்கிய வேகத்திலேயே முடங்கிவிட்டதால் ராசியில்லாத நடிகை என்ற முத்திரை குத்தப்பட்டது.

கேரளாவில் பிறந்து மும்பையில் வளர்ந்தவள் நான். 2003 இலிருந்து திரைப்படங்களில் நடித்தாலும், 2009இல் அமிதாப் பச்சனுடன் நடித்த "பா", 2010இல் நஸ்ருதீன் ஷாவுடன் நடித்த "இஷ்க்யா" போன்ற படங்கள் மூலமாகத்தான் நான் வெளிவர முடிந்தது. 2011ஆம் ஆண்டில் வெளியான "தி டேர்ட்டி பிக்சர்" சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றுத் தந்தது. கதாநாயகனே இல்லாத "கஹானி"யில் நடித்தது தொடர்ந்து விருதுகளை வாரி வழங்கியது.

2012ஆம் ஆண்டு யூடிவி மோஷன் பிக்சர்ஸைச் சேர்ந்த சித்தார்த் ராய் கபூரை திருமணம் செய்துகொண்டது என்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றம். என்னுடைய திருமணம் தொழிலைப் பொறுத்தவரை எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

**- வித்யா பாலன் -**

# அன்பு கொள், அரவணைத்துச் செல்!



சாலைகளில் சந்திக்கும் மனிதர்கள் நம் வாழ்வில் நிறைய உண்டு. அவர்களின் முகமும், தோற்றமும் மனதில் விரியும் போது அவர்களை எங்கே, எந்த இடத்தில் பார்த்தோம் என மனம் அசை போட்டுப் பார்க்கும். சாலைகள் எத்தனை எத்தனை காலடித் தடங்களை பதிந்து வைத்திருக்கின்றன. மஞ்சள் வெளிச்சத்தில் புறப்பட்டு வியர்வை துளிகளுடன் கடிதம் சுமக்கும் தபாற்காரர்கள். ஒற்றைப் பூ வைத்த ஆரம்ப பள்ளி டீச்சர்கள். தெருத் தெருவாய் கூவி ஐஸ் விற்பவர்கள். பள்ளி மாணவர்களின் சைக்கிள் டயர் தடங்கள். பாந்தமான அழகு, பக்குவ பேச்சுடன் விலாசம் கேட்கும் இளம் பெண். இப்படி எத்தனை எத்தனை முகங்களை சாலை வழிப் பயணங்கள் மனசுக்கு நெருக்கமாகக் கொண்டு வந்து விடுகின்றன. இந்தப் படத்துக்கு நான் எடுத்துக் கொண்ட கதை மாந்தர்களும் இவர்கள்தான். அதனால்தான் படத்துக்குப் பெயர் "நெடுஞ்சாலை."

"சில்லுன்னு ஒரு காதல்" படத்தில் காதலோடு, சின்ன கலவரம் வைத்திருப்பேன். அதே வேகம் இந்தப் படத்திலும் இருக்கும். சூர்யா, ஜோதிகா, ஏ.ஆர்.ரஹ்மான் என பெரிய பலத்தோடு நான் செய்த படம் "சில்லுன்னு ஒரு காதல்". ஆனால் இந்த முறை அப்படி எதுவும் இல்லை. கதையை நம்பி இறங்கினேன்.

கண நேரத்தில் நிகழ்ந்து விடும் சின்ன விபத்து வாழ்க்கையின் எந்த எல்லைக்கும் நம்மை அழைத்துச் செல்லலாம். அந்த மாதிரி எந்தக் காரணமும் இல்லாமல் பாதிக்கப்படுகிற ஒரு வாழ்க்கை, தனக்கு நடந்ததை எப்படிக் கடந்து போகிறது என்பதுதான் கதை.

இதோ இந்தச் சாலையில் கடக்கிற எத்தனை முகங்கள் நம் ஞாபகத்துக்கு வரும். ஆனால் இனி ஒவ்வொரு முகத்தையும் கவனிக்கத் தோன்றுகிற மனநிலைக்கு இந்தப் படம் உங்களைக் கொண்டு போகும். அதே நேரத்தில் சக மனிதனின் நலனிலும் அக்கறை கொள்ள வைக்கும். அன்பு கொள், அரவணைத்துச் செல் என்பதுதான் திரைக்கதை.

**- இயக்குநர் கிருஷ்ணா**

# பேஸ்புக்கின் பிறந்தநாள் பரிசு!




கடந்த வியாழனன்று தனது பத்தாவது பிறந்த நாளை கொண்டாடிய பேஸ்புக் தளம் தனது ஒவ்வொரு பயனருக்கும் "Look Back" என்ற அற்புதமான வீடியோ ஒன்றை பரிசாகத் தந்துள்ளது.

பத்தாண்டுகளுக்கு முன்பு இதே திகதியில் (04-02-2004) தொடங்கப்பட்ட பேஸ்புக் தளம் இன்று இணையத்தை பயன்படுத்தும் பெரும்பாலானவர்களை ஆக்கிரமித்துள்ளது. சொல்லப்போனால் பேஸ்புக்கை பயன்படுத்தவே இணையத்திற்கு வந்தவர்கள் கூட இங்கே இருப்பார்கள். நம் வாழ்வில் ஒரு முக்கிய அங்கமாக உள்ள பேஸ்புக் தளத்தை இன்று 120 கோடி பேர் பயன்படுத்துகின்றனர்.

பேஸ்புக் தளம் நமக்கு பரிசாக அளித்துள்ள டுழழம டயஉம வீடியோவில், நாம் பேஸ்புக் கணக்கு தொடங்கிய நாள் முதல் இன்று வரை நமக்கு அதிக லைக்ஸ் வாங்கித் தந்த புகைப்படங்கள்.ஸ்டேட்டஸ் உட்பட 16 போட்டோ மற்றும் ஸ்டேட்டஸ்களை 1:02 நிமிட வீடியோவாக தொகுத்து நமக்கு கொடுத்துள்ளது.

உங்கள் Look Back வீடியோவை பார்க்க - https://www.facebook.com/lookback

# புற்றுநோயைத் தோற்கடிப்பேன்...



"கடந்த ஒக்ரோபர் மாதம் ஏற்பட்ட வயிற்று வலிக்காக மருத்துவரிடம் பரிசோதிக்க சென்றிருந்தேன். அப்போதுதான் என்னைப் புற்று நோய் தாக்கியிருப்பது தெரிய வந்தது. ஆனால் இன்னொரு தகவலையும் அந்த மருத்துவர் சொன்னார். இந்த புற்றுநோய் இப்போது தோன்றியதில்லை. இளம் வயது முதலே இது உங்கள் உடலுக்குள் இருக்கிறது என்றார்.

அதிர்ச்சியை விட பிரமிப்புதான் அதிகம் இருந்தது. பொதுவாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் குறுகிய கால வாழ்க்கைதான் வாழ்வார்கள் என்ற எண்ணம் இருக்கிறது. அது கற்பனையானது. சினிமாவில்தான் அப்படிக் காட்டுவார்கள். ஆனால் இது உண்மையில்லை. இளைஞர் ஒருவருக்கு புற்றுநோய் தாக்கினால் அது உடல் முழுவதும் பரவும். எனக்கு 90 வயது. இளைஞர்களைப் போன்ற பாதிப்பு எனக்கு இல்லை. புற்றுநோய் பரவவும் வாய்ப்பில்லை. புற்றுநோய் பாதிப்பால் என் வாழ்க்கை முடிந்து விடவில்லை. அப்படி இருப்பவர்கள் சந்தோஷமாக வாழ முடியும்.

எனது அம்மாவுக்கும் புற்றுநோய் பாதிப்பு இருந்தது. அவர் 96 வயது வரை வாழ்ந்தார். என் மீது பரிதாபப்படுவதை நான் விரும்பவில்லை. என்னைச் சுற்றி இருப்பவர்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும். எல்லாருடைய அன்பும் எனக்குத் தேவை. நான் புற்றுநோயைத் தோற்கடிப்பேன்."

**- சமீபத்தில் மறைந்த நடிகர் நாகேஸ்வரராவின் கடைசிப் பேட்டியிலிருந்து....**

# முயற்சி செய்யுங்கள்

"வேலை கிடைக்கவில்லை. ஒரே துன்பம்" என்று மூக்கைச் சிந்துவதைவிட, இப்படியொரு முயற்சி செய்தால் என்ன?

சென்னையிலிருந்து திருச்சி போகும் வழியில் தொழுப்பேடு என்ற கிராமம். அங்கு ஒரு ரயில்வே கேற் உண்டு. கடவை அடைத்திருக்கும் போது கார் நிற்க வேண்டி வரும். கிராமத்துப் பெண்கள் மோர் விற்பார்கள். ஒரு டம்ளர் பத்துக்காசு மட்டுமே.

இரண்டு டம்ளர் மோர் குடித்துவிட்டு இரண்டு ரூபாய் மோர்க்காரியிடம் கொடுப்பேன். என் மனைவி இதற்காகக் கோபித்துக் கொள்வார்.

"வேலை இல்லை என்று பல்லவி பாடாமல், பிச்சை எடுக்காமல் இப்படித் தொழிலைச் செய்கிறாளே ஒருத்தி, அதைக் கௌரவிக்க வேண்டுமல்லவா?" என்பேன்.

வாழ நினைத்தால் வாழலாம், வழியா இல்லை பூமியில்? "வேலை கிடைக்காதது ஒரு துன்பமல்ல; வேலை உங்களுக்குள்ளேயே இருக்கிறது. முயற்சி செய்யுங்கள்.

**-'துன்பங்களிலிருந்து விடுதலை' நூலில் கண்ணதாசன்**

# அறிவு மேதை நீலன் திருச்செல்வம்

– டி.பி.எஸ் ஜெயராஜ் கட்டுரையிலிருந்து. **2**

நீண்டகால மோதல் இலங்கை தமிழர்களிடையே ஏற்படுத்தியுள்ள கடுமையான விளைவு, தமிழ்ஈழ ஆயுதப் போராட்டத்தைப் பற்றி குரலெழுப்பும் வாய்ச்சொல் வீரர்களால் உணரப்படாத ஒன்றாக அல்லது பூரண சம்மதத்துடன் அலட்சியப்படுத்தப்பட்ட ஒன்றாகவே இருந்தது. தமிழர்களின் சனத்தொகை ஏற்கனவே தன்னை ஒரு அற்பமான அமைப்பாக உருவாக்கப்பட்ட மிகவும் முன்னேற்றகரமான வெளிப்பாடு என்று நடுநிலையான அறிவாளிகள் புகழாரம் சூட்டினார்கள்.

சிங்கள கடும்போக்குவாதிகள் தீர்வுப் பொதியை முன்வைப்பதன் மூலம் பிரிவினைவாதத்தை ஊக்குவிக்க முயற்சிக்கிறார் என்று நீலன் மீது குற்றம் சாட்டிய அதேவேளை, எல்.ரீ.ரீ.ஈ மற்றும் அதன் கூட்டாளிகள் தமிழர் நலன்களை காட்டிக் கொடுத்துவிட்டார் என



தமிழர் வட்டாரங்களில் அதைப்பற்றிய முழு அறிவும்



வழங்கப்படாமல் தவறான தகவல்களை மட்டுமே வழங்கி, மற்றும் அந்த தீர்வுப் பொதியில் என்ன அடங்கியுள்ளது என்பதைப் பற்றிய ஒரு விளக்கமும் இல்லாமலே அவர்மீது சேறு வாரி இறைக்கப்பட்டது. எல்.ரீ.ரீ.ஈயின் பிரசாரம் தீர்வுத் திட்டத்துக்கு குழிபறிப்பதாகவும் சந்தர்ப்பவாத காரணங்களுக்காக முற்றிலும் அதைக் காட்டிக் கொடுப்பதாகவுமே அமைந்தது. இந்த மோசமான பின்னணியில்தான் எல்.ரீ.ரீ.ஈ நீலனைக் கொன்றது.

மாற்றிவிட்டதால், போரில் எல்.ரீ.ரீ.ஈ வென்றாலோ அல்லது தோற்றாலோ அது பொருத்தமற்ற ஒரு சூழ்நிலையாக மாறக் கூடிய நிலைக்குச் சென்றுவிட்டது. மோதல் எவ்வளவு நீண்ட காலத்துக்கு இழுபட்டுச் செல்கிறதோ அந்தளவு அதிகமாக தமிழ் பகுதிகளில் பொருளாதார வீழ்ச்சி ஏற்படும். சனத்தொகை குறைவடையும். இறுதியான ஆய்வாக, பாரிய ஆரவாரத்துடன் ஆரம்பித்த தமிழர்களது யுத்தம் ஒரு பரிதாபகரமான சிணுங்கலாக, தேய்வடைந்துவிடும். இதில் மற்றொரு உண்மை என்னவென்றால் தீவில் ஒரு தமிழ் தேசம் உருவாவதற்கு விரோதமாக பூகோள அரசியல் யதார்த்த நிலை உள்ளது. எனினும் புலிகளின் வீர தீரம் மற்றும் அதிக தியாகம் என்பனவற்றுக்கு அர்த்தம் இல்லாமல் காலப்போக்கில் அவர்களது இலட்சியத்தை அடைவதற்கு வழியில்லாமல் போய்விடும்.

இவைகள் மற்றும் இன்னும் சிலவற்றின் காரணமாக போரை இடைநிறுத்துவதற்காக தீவிரமான முயற்சியில் ஈடுபட்டிருந்தவர்கள் மத்தியில் நீலன் திருச்செல்வமும் ஒருவராக இருந்தார். அரசாங்கம் எல்.ரீ.ரீ.ஈ யுடன் பேச்சு வார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை அவர் திரை மறைவில் சுறுசுறுப்பாக மேறகொண்டு வந்தார்.

1994இல் ஜனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்கவின் வருகையுடன் அரசியல் மறுசீரமைப்புக்காக ஒரு புதிய அரசியல் இடைவெளி உதயமானது. சட்ட, அரசியலமைப்பு, மற்றும் அரசியல் நிபுணரான நீலன் திருச்செல்வம், மற்றும் அவருடன் சேர்ந்து அப்போதைய அரசியலமைப்பு விவகார அமைச்சராக இருந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் 1995இல் ஒரு அரசியல் தீர்வுப் பொதியினை உருவாக்குவதில் பெரும் பங்களிப்பை ஆற்றினார்கள்.

எல்.ரீ.ரீ.ஈ மற்றும் அதன் ஆதரவாளர்கள், தசாப்தங்கள் பழமையான இன முரண்பாட்டுக்கு ஒரு தீர்வைக்காணும் வகையில் உருவாக்கப்பட்ட பொதுவாக தீர்வுப் பொதி என அழைக்கப்பட்ட இந்த அரசியலமைப்பு சீர்திருத்த திட்டங்களை விமர்சித்தார்கள். இந்த முன்மொழிவுகளை, தமிழர் தேசிய பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அவர்மீது குற்றம் சுமத்தின.

எல்.ரீ.ரீ.ஈயின் கண்களுக்குத் தெரிந்த நீலனின் குற்றம் என்னவென்றால், ஒரு பகுதி அரசியலமைப்பு சீர்திருத்த முன்மொழிவுகளை பேராசிரியர் ஜி.எல்.பீரிசுடன் சேர்ந்து இணையாக எழுதியதுதான். இந்த பொதியின் விபரங்கள் பத்திரிகைகளில் வெளிவந்த சில நாட்களிலேயே 1995 ஆகஸ்ட் 11இல், யாழ்ப்பாணம், சுண்டிக்குழியில் உள்ள அவர்களது தலைமையகத்தில் எல்.ரீ.ரீ.ஈ ஒரு பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டியது. அது எல்.ரீ.ரீ.ஈயின் அரசியல் ஆலோசகர் அன்ரன் ஸ்ரனிஸ்லாஸ் பாலசிங்கம் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ அரசியல் பிரிவுத் தலைவர் சுப்பையா பரமு தமிழ்செல்வன் ஆகியோரால் நடத்தப்பட்டது.

தீர்வுப் பொதி முறைப்படி எல்.ரீ.ரீ.ஈக்கு அனுப்பப்படாத போதிலும் பாலசிங்கம் அதனை கண்டித்தார். தமிழர்களுக்கு எதிரான நம்பிக்கைத் துரோகமான செயல் எனக்கூறி அதனை நிராகரித்த பாலசிங்கம் தொடர்ந்து கூறுகையில் "அரசாங்கம் ஒரு அபத்தமான மற்றும் கேலிக்கிடமான திட்டத்தை செயற்படுத்துகிறது, அது தமிழர்களுக்கு ஒரு அரசியல் தீர்வையும் தமிழ் புலிகளுக்கு ஒரு இராணுவத் தீர்வையும் முன்மொழிகிறது. ஒரு அதிகாரப் பகிர்வுப் பொதியை வழங்கி தமிழர்களை மயக்குவதன் மூலம் எல்.ரீ.ரீ.ஈயை தமிழ் மக்களிடம் இருந்து பிரித்துவிடலாம் என்கிற தவறான கற்பனையை அடிப்படையாகக் கொண்டதுதான் இந்தத் திட்டம்" எனத் தெரிவித்தார். அது ஒரு பச்சை விளக்கு அதை தொடர்ந்து நீலனுக்கு எதிரான தீவிர பிரச்சாரங்கள் ஆரம்பமாகின.

ஆக்கபூர்வமாக அந்தப் பொதியை ஆய்வு செய்வதைப் பற்றி வெகு சிலரே கவலைப்பட்டார்கள். அதில் குறைபாடுகள் இருந்தாலும். இலங்கை சுதந்திரமடைந்ததின் பின் அதிகாரப் பகிர்வை தீர்த்து வைப்பதற்கு உருவாக்கப்பட்ட சாத்தியமான திட்டம் ஜிஎல் - நீலன் பொதி மட்டுமே. "1995 ஆகஸ்ட் 3இல் வெளியான முன்மொழிவுகளில் மட்டும்தான் பிராந்தியங்களுக்கு அதிகாரத்தை வழங்குவதன் மூலம் மாறுபட்ட இனக்குழுக்களிடையே உள்ள சமநிலையற்ற தன்மையை மாற்றுவதற்கான துணிச்சலான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்று நீலனே அதைப் பற்றிச் சொல்லியுள்ளார். ஒற்றையாட்சி முறையை பிராந்தியங்களின் ஒன்றியமாக மாற்றும்படி அதில் முன்மொழியப் பட்டிருந்தது.

2003 மார்ச் 11இல் எல்.ரீ.ரீ.ஈயின் வங்கியான வைப்பகத்தை கிளிநொச்சியில் வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்துவைத்து பேசிய அன்ரன் பாலசிங்கம் ஒரு திடுக்கிடும் தகவலை வெளிப்படுத்தினார். அந்தப் பேச்சு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 2003 மார்ச் 13ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் முழுதாக வெளிவந்திருந்தது. அது தொடர்பான எடுத்தாள்கை கீழே தரப்பட்டுள்ளது.

"1995ஆம் ஆண்டு நீலன் திருச்செல்வம் அரசியலமைப்பு திருத்த வரைபு ஒன்றைச் சமர்ப்பித்தார். அது சரியான வரைபு. அது ஏற்கக்கூடியது. ஆனால் பின்னர் 2000ஆம் ஆண்டில் அந்த வரைபின் அடிப்படையில் சந்திரிகா ஒரு திருத்த வரைபினைச் சமர்ப்பித்தார். அந்த வரைபு நீலன் திருச்செல்வத்தின் வரைபின் அரைகுறையான ஒரு தொகுதியாகும்"

நீலனை ஒரு துரோகியாக சித்தரித்து தீர்வுப் பொதியை ஒரு துரோகச் செயலாக பழிகூறி நிராகரித்த எல்.ரீ.ரீ.ஈ, சில வருடங்களின் பின் நீலன் திருச்செல்வத்தின் வரைபின் தகுதியை ஒப்புக்கொள்கிறது. ஜிஎல் - நீலன் பொதியினை அப்போது தூற்றிய பாலசிங்கம் இப்போது அதைப் போற்றுகிறார். சக்கரம் ஒரு முழுவட்டம் சுற்றி வந்து நிற்கிறது.

தமிழர்களின் எதிர்காலம் எப்படியிருந்தாலும், துரோகத்தை காரணம் காட்டி கொல்லப்பட்ட நீலன் போன்ற ஆத்மாக்கள், உடல் ரீதியாக மீண்டும் உயிர்த்தெழப் போவதில்லை.

மரணத்தை மகிமைப் படுத்துவதும் மற்றும் அரசியல் வன்முறையை நியாயப்படுத்துவதும் அவருக்கு வெறுப்பை ஏற்படுத்துவதாக இருந்தன. எனவே நீலன் திருச்செல்வத்தை நினைவு கூர்ந்து அவரது 70 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் ஒரு தருணத்தில் தமிழ் சமூகத்தினர் இந்த கொடுமையான நிகழ்வுகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பது மிகவும் பொருத்தமான ஒன்று.



ஐ.டி.எம் நிறுவனத்தின் சாவகச்சேரி பிரிவு மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி றஞ்சனா நவரத்ணம் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் சான்றிதழ் பெற்ற மாணவர்களுடன் விருந்தினர்கள் நிற்பதையும் காணலாம். (11)

# நாட்டின் பொருளாதாரம் உயர்வடைவதற்கு விவசாயிகளின் பங்களிப்பு அவசியமானது

## வடமாகாண விவசாயத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் உள்ள விவசாயிகள் பொருளாதார நிலையில் உயர்வடைந்தால் தான் நாடு முன்னேற்றம்பெறும். அந்தவகையில் விவசாயிகளின் வாழ்வாதாரம் குறித்து அக்கறை செலுத்த வேண்டும் என வடமாகாண விவசாயத்துறை அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

உள்ளூர் உருளைக்கிழங்கினை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு (சதோச) விற்பனை செய்யும் நிகழ்வு நீர்வேலி கரந்தன் பகுதியில் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உருளைக்கிழங்கை விற்கும் போது ஒரு நியாயமான விலையை ஏற்படுத்தித் தரவேண்டும். அதே போல உள்ளூர் அறுவடை செய்யும் காலத்தில் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்கான தீர்வையினை உயர்த்துவதற்கான வாய்ப்பு இருக்குமாக இருந்தால் உள்ளூர் செய்கைகளுக்கான கேள்வி அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்படும். என்றும் விவசாயிகள் எங்களிடம் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். இருப்பினும் நினைத்ததற்கு மாறாக சில நிர்வாக ரீதியிலான பிரச்சினைகள் ஏற்பட்டன.

எனினும் விவசாயிகளின் தேவைகளையும் ஒரு புறம் நிறைவேற்றிக் கொண்டு இருக்கும் போதும் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து பொருளாதார ரீதியில் மேலும் உயர்வடைவதற்கும் வடக்கு மாகாணத்தின் நிர்வாகத்தின் கீழ் கமநலசேவைகள் கொண்டுவரப்பட்டால் மட்டுமே சாத்தியமாகும். எனினும் நாம் அதற்கான முயற்சிகளில் நிச்சயமாக ஈடுபடுவோம். ஏற்கனவே அதற்கான சட்டநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் தற்போது உள்ள நடைமுறையினால் எமது விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது உண்மையான விடயம். அண்மையில் உருளைக்கிழங்கினை விவசாயிகள் அறுவடை செய்த பின்னர் தாங்களாகவே குறைந்த விலைக்கும் 10 வீத கழிவுடனும் விற்பனை செய்துள்ளனர்.

முன்னர் சதோச நிறுவனத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடலில் கிலோ ஒன்றிற்கு 65ரூபா வீதம் கொள்வனவு செய்வதாக தெரிவிக்கப்பட்டது. எனினும் நிர்ணயிக்கப்பட்ட விலையின் அடிப்படையிலேயே வழங்குவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டியமையால் 70 ரூபாவிற்கு ஒரு கிலோ உருளைக்கிழங்கினை குறித்த நிறுவனத்திற்கு வழங்க முடிவு எடுக்கப்பட்டது. அத்துடன் கொள்வனவில் 10 வீத கழிவும் அறவிடப்படவில்லை. கிழங்கு கொடுக்கப்படும் சாக்கிற்கும் 30 ரூபா வழங்குவதாகவும் சதொச நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

எனவே இது எமது விவசாயிகளுக்கு ஒரு வாய்ப்பான சூழல் .மனம் தளராது அதிகளவில் இனிவரும் காலங்களில் ஈடுபட வேண்டும். இன்னும் அதிக விலைக்கு விற்பதற்கும் நாம் வழிஏற்படுத்திக் கொடுப்போம். என்றார். (48)

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி தடுக்குமாறு மக்கள் கோரிக்கை

சுழிபுரம் குடாக்கனை பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கையால் பல்வேறு சிரமங்களை தாம் எதிர்நோக்குவதாக இப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப் பிரதேசத்தில் உள்ள இரு வீடுகளில் இந்த நடவடிக்கை இடம்பெற்றுவருவதாகவும் இங்கு கசிப்பு அருந்த வருபவர்கள் சந்திகள் மற்றும் ஒழுங்கைகளில் நின்று தகாத வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடுகின்றனர். இதனால், பெண்கள் மற்றும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இரவு வேளைகளில் இப்பகுதியூடாக செல்வோர் மீதும் வீண் வாக்குவாதங்களிலும் சண்டைகளிலும் மதுப்பிரியர்கள் ஈடுபடுவதாகவும் இதனால் இதனூடாக பயணிப்போர் அச்சத்துடன் செல்லவேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துமாறு வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு பல தடவைகள் அறிவித்த போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவும் தெரிவிக்கும்இப்பிரதேச மக்கள் தாம் இது தொடர்பில் யாரிடம் முறையிடுவது என தமது ஆதங்கத்தை தெரிவிக்கின்றனர். (48)

# தமிழர்களின் கலாசாரத்தை சீரழிக்க இடமளிக்கமாட்டோம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தமிழ் மக்களின் கலாசாரம் பக்தி பூர்வமானதொரு சிறந்த கலாசாரம் இதை சீரழியவிட மாட்டோம் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகா டபிள்யு. பி.விமலசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் நல்லூரடியில் இயங்கும் மசாஜ் கிளப் தொடர்பில் செயதியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் ஹோட்டல்கள் இவ்வாறான கிளப்புக்கள் குறித்து மிக கண்காணிப்புடன் இருக்கிறோம். எப்போதும் புலனாய்வுகள் செய்கிறோம். தவறான முறையில் இவை செயற்படுமானால் உடன் நடவடிக்கை எடுப்போம்.

நான் 25 வருடகாலம் மட்டக்களப்பில் அதுவும் தமிழ் மக்களுக்குத்தான் சேவை செய்தேன். சிங்கள மக்களின் கலாசாரத்திலும் பார்க்க தமிழ் மக்களின் பக்திபூர்வமான கலாசாரத்தை நான் நன்கு அறிவேன். யாழ். மக்களின் கலாசாரத்தைச் சீரழிக்கும் வகையில் எந்தவொரு சட்டவிரோத செயற்பாட்டுக்கும் நாம் இடமளிக்கமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ)

# புதிதாக அழகுற நிர்மாணிக்கப்படும் காரை.சித்திரகூடபிள்ளையார் ஆலயம்

**கா**ரைநகர் துறைமுகம் சித்திர கூட பிள்ளையார் ஆலயம் தற்போது முழுமையாக புதிய ஆலயமாக பெரியளவில் அழகுற நிர்மாணிக்கப்பட்டுவருகிறது.

1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ் ஆலயம் அமைந்த இடம்உயர் பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்ட போது இவ்வாலயம் மற்றும் பலுகாடு ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம் என்பவற்றின் பூஜை வழிபாடுகள் இல்லாமல் போனதுடன் அங்கு வாழ்ந்த மக்களும் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றனர்

இதனால் இவ்வாலயங்களின் பூஜை வழிபாடுகள் நிறுத்தப்பட்டதுடன் ஆலயமும் பூட்டிய நிலையில் காணப்பட்டது.

இதன் பின்னர் இடம் பெற்ற யுத்த அனர்த்தங்களினால் இவ்வாலயம் சேதமடைந்து படிப்படியாக கட்டடங்கள் பழுதடைந்து இடிந்து விழுந்தன.

மேலும் இவ்வாலயத்துக்கு உரிததான சித்திரத்தேரும் அங்கு இருந்த நிலையில் பல வருடங்களின் பின்னர் நகர்த்தக்கூடியதாக இருந்ததால் கடற்படையின் அனுமதி பெற்று வெளியே எடுக்கப்பட்டது.

இதன்பின்னர் இப்பகுதி விடுக்கப்பட்டதை அடுத்து இப்பகுதி மக்களும் ஆலய நிர்வாகத்தினரும் இவ்வாலயத்தை சென்று பார்த்த போது இவ்வாலயம் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்பட்டதைக் கண்டனர்.

இதனையடுத்து இங்குள்ள மக்கள் ஒன்றிணைந்து ஒரு சபையை ஏற்படுத்தி அதனூடாக அழிவடைந்த ஆலயம் அமைந்த இடத்திலேயே முழுமையாக புதிதாக விசாலமாக விநாயகர் ஆலயத்தை அமைக்க வேண்டும் என தீர்மானித்து நீர்மாணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.



தற்போது இவ்வாலயம் அதாவது காரைநகர் சித்திர கூடப் பிள்ளையார் ஆலயம் பெரிய ஆலயமாக புதிதாக அழகுற அமைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை இவ்வாலய நிர்மாணப்பணிகள் குறிப்பாக ஆலய அமைப்பு சித்திர வேலைகள் தென்னிந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட சிற்ப ஆச்சாரியர்களினால் மிகச சிறப்பான முறையில் அழகுற அமைக்கப்பட்டு வருகின்றது.



சிறப்பாக இவ்வாலயத்தின் மூலஸ்தானம் முற்றிலும் கருங்கல்லினால் அமைக்கப்பட்டு வருவதுடன் அதில் ஸ்தூபி (பண்டிகை, விமானம்) என்பனவும் கருங்கல்லினால் அமைக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில் இவ் ஆலயம் தான் முதன் முறையாக கருங்கல்லினால் அமைக்கப்படுவது சிறப்பம்சமாகும். அத்துடன் இவ் ஆலயத்தின் ஸ்தூபி அமைப்பானது இந்தியாவின் தஞ்சைப் பெருங்கோயில் அமைந்திருப்பதைப் போன்று உள்ளதாக அறியப்படுகின்றது. இதைவிட இவ் வாலயத்தின் கிழக்கு தெற்கு வாசல்களுக்கு 60 அடி உயரமான கோபுரங்கள் கருங்கல்லினால் அமைப்பதற்கான ஆயத்த வேலைகளும் தற் போது இடம் பெற்று வருகின்றன.

மேலும் இவ்வாலயத்தின் கூரை முழுமையாக கொங்கிறீற்றினால் அமைக்கப்படவுள்ளது. அத்துடன் இவ்வாலயத்தின் நிர்மாணப் பணிகள துரிதமாக இடம்பெற்று வருவதால் வெகுவிரைவில் பூர்த்தியாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**த. இரத்தினசிங்கம்**
**காரைநகர்.**



யாழ். சென்.ஜோண்ஸ் கல்லூரியின் சென்ஜோண்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் வருடாந்த ஒன்று கூடல் கடந்த வியாழக்கிழமை கல்லூரியின் பிரதி அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ். போதனாவைத்தியசாலையின் வைத்தியர் எம்.அருன்கரன் கலந்து கொண்டார். (20)

# மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் 11 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

(மானிப்பாய்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையில் இருந்து ஏழு வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய 11 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இதன்படி திருமதி.சிவசக்தி சோமநாதன், திருமதி.சுகந்தினி அருள்வதணன், திருமதி.ரதிதேவி சண்முகநாதன், திருமதி. பசுபதி உதயகுமார், திருமதி.குணமணி சிவநடராசா, திருமதி. கிருபா லோகதாசன், திருமதி.சசினி மணிவண்ணன், திருமதி.பகீரதன் உசானந்தி, திருமதி. பானுரேகா அன்ரனிசுதாகர், திருமதி.கனிமொழி சிறீசுதாகர் திருமதி.இராசமதிஜெயக்குமரன் ஆகிய ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

பாடசாலையில் கற்றல் கற்பித்தல் மட்டுமன்றி இணைபாடவிதான செயற்பாடுகள் பாடசாலை அபிவிருத்தி போன்றவற்றிற்கு நீண்டகாலம் அரும்பணியாற்றிய சிரேஷ்ர ஆசிரியர்கள் பலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. மாகாணப் பாடசாலைகளில் நீண்டகாலம்(7 வருடங்களுக்கு மேல்) சேவையாற்றிய ஆசிரியர்களுக்கான உள்ளக இடமாற்றம் நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றது.வலிகாமம் கல்விவலயததினரால் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதனடிப்படையில் மேற்படி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்களுக்கு பதிலீடாக 12 புதிய ஆசிரியர்கள் இப் பாடசாலைக்கு வலிகாமம் கல்வி வலயத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் பாடசாலையில் தமது கடமைகளை பெறுப்பேற்றுக் கொண்டுள்ளனர். இதன்படி திருமதி.சு.சிவகுந்தன் (நூலகம்), திருமதி.பி.பிரபாகரன் (கலை),திருமதி.நி.அருள்மொழிவர்மன் (தகவல் தொழில்நுட்பம்),திருமதி. ஜெ.சற்குணநாதன் (தமிழ்),திருமதி.ப.றமேஸ் (வழிகாட்டல் ஆலோசனை),திருமதி.மகிழ்ராஜ்துரை (மனைபொருளியல்),வ.விக்னேஸ்வரமூர்த்தி (கணக்கீடு),.து.ஜெயமோகன் (கிறிஸ்தவம்),ரவீந்திரன்(ஆங்கிலம்)திருமதி.சு.சிவபாதம் (இந்துநாகரிகம்)திருமதி.ஜெ.றெஜீனா (ஆரம்பப்பிரிவு) திருமதி.க.இராகுலன் (ஆரம்பப்பிரிவு) ஆகிய ஆசிரியர்கள் கடமைகளினை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்கள். (63)

# ஆலய அறங்காவலர் சபையால் அறப்பணிகளுக்கு நிதிப்பங்களிப்பு

(வலி.மேற்கு)

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையூடாக ஏழு நலநோம்பு சேவைகளுக்கு நிதி பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்த நான்கு நயினாதீவு வாழ் குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் வீதம் 2 இலட்சம் வழங்கி வாழ்வில் ஒளியேற்றப்பட்டுள்ளதாக அறங்காவலர் சபையின் செயலாளர் ந.மோகனரூபன் தெரிவித்தார்.

2012 ஆண்டில் நயினைநாகபூஷணி அம்மன் ஆலய நிதியில் இருந்து கீழ்வரும் சேவைகள் முன்னிறுத்தப்பட்டன.

இதன்படி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவகா 37,000 ரூபாவும், புற்றுநோய், எயிட்ஸ் தடுப்பு சங்கத்திற்கு 50ஆயிரம் ரூபாவும், நயினாதீவு வைத்தியசாலை வைத்திய அதிகாரிக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு 15,000 ரூபாவும், மரம் நடுகைக்காக ரூபா 175000ரூபாவும், வல்லி காட்டு வீதி, அறுப்புளி வீதி மின்னிணைப்புக்கு 70ஆயிரம் ரூபாவும், தேசிய கல்வி நிறுவனத்திற்கு 60 ஆயிரம் ரூபாவும், நயினாதீவு வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட நான்கு குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபா வீதம் 2இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டன.

# காப்பெற் வீதியாக மாறும் வெள்ளாங்குளம் வீதி

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் வெள்ளாங்குளம் வரையான பிரதான வீதிக்கு காப்பெற் இடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கல்விளான் வரை இப்பணிகள் இடம் பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதி அகலிக்கப்பட்டு காப்பெற் வீதியாக புனரமைக்கப்பட்டுவருவதால் தற்போது இதனூடான போக்குவரத்து இலகுபடுத்தப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் இப்புனரமைப்பு பணிகள் இந்திய திட்டத்தின் கீழ் ராணி ஒப்பந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இப்பணிகள் மந்தகதியில் இடம்பெற்றுவருவதால் இதனூடான வாகனப்போக்குவரத்து தாமதமாகிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே மக்களுடைய போக்குவரத்தை இலகுபடுத்தும் வகையில் இவ்வீதிப் புனரமைப்பு பணிகளை துரிதமாக மேற்கொள்ள உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.(140)



கைதடி சரஸ்வதி சனசமூக நிலைய அங்கத்தவர்களால் கைதடி நேவையூர் வீதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படுவதனைக் காணலாம். (51)

# பதிவிருக்கப் பெட்டகம்

உண்மையில் பக்தினை அல்லது வலசினோவை இங்கு உள்ள மார்க்சிய இடதுசாரிகள்தான் அறிமுகப்படுத்தியிருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால் மொழியின் அமைவுகள் பற்றிய ஒரு புரிதல் உருவாகியிருக்கும். வர்க்கப்போராட்டம் என்பது கலாச்சாரத்தில், மொழி அமைவுகளில், பேச்சில் எப்படி செயல்படுகிறது என்பதும் புரிந்திருக்கும். பேச்சு வேறு அரசியல் வேறு என்பதாக அல்லாமல் பேச்சே அரசியல் தான் என்பது புரிந்திருக்கும். பொருளியல் அடிக்கட்டுமான மார்க்சிய நிர்ணயவாதத்தன்மை தளர்ந்திருக்கும். கலாச்சாரப்போர் என்பது புரட்சிக்கு பின்பு மட்டுமல்ல புரட்சிக்கு முன்பே அவசியப்பட்டிருப்பதை புரிந்திருப்பார்கள். முதலாளித்துவ ஜனநாயகம் என்பதும், மனிதநேயம், விடுதலை போன்ற கருத்தாக்கங்கள் மேற்கத்திய மற்றும் ருஷ்ய, ஜேர்மன் நாவல்கள் மூலம்தான் பரவலாகி ஒரு மனிதார்த்த உணர்வு நிலையாகவும், உரிமையாகவும் மாறியது. அதேபோல் புரட்சிகர அரசியலை முன்னெடுப்பதற்கு கலாசார, இலக்கியப் பணி அவசியமானது என்பதை புரிந்திருப்பார்கள் இடதுசாரிகள். இங்கு பக்தின், அல்தூஸர், ஜேம்சன் போன்றவர்களை சரியாக உள்வாங்கி அறிமுகப்படுத்தியிருக்க வேண்டும். அதை அவர்கள் செய்யாததால், அவர்கள் பற்றிய அறி முகம் என்பது இங்கு ஒரு பாஷன் மனோபாவத்தையும், கலாச்சார சீரழிவு என்பதான பிராசாரத்திற்குள்ளும் மாட் டிக்கொண்டது.

— ஜமாலன்

இலக்கிய விமர்சனம் எனபது கடினமான காரியம் என்கிறார் மாஷெரி. படைப்பை அறிய நாம் அதன் வெளியே போக வேண்டும். அதே நேரத்தில் படைப்பின் உள்ளேயும் போக வேண்டும். அதாவது படைப்பின் பலவேறு அர்த்த தளங்களை அறிய வேண்டும். ஆக, படைப்பிற்கு வெளியே உள்ள பிற அறிவுத்துறை, பிற இலக்கிய மரபு போன்றவற்றையும் படைப்பிற்குள்ளே இருக்கும் அர்த்த வடிவ குணங்களையும் அறிய வேண்டும். படைப்பிற்கு வெளியே போவதும் படைப்பிற்கு உள்ளே போவதும் ஆகிய இருவகைச் செயல்களையும் விமர்சகன் ஒரே நேரத்தில் செய்ய வேண்டும். ஒன்றிற்கு அதிக முக்கியத்துவமும், மற்றதற்கு குறைந்த முக்கியத்துவமும் கொடுக்கக்கூடாது. இவ்விரு வகை அணுகல் முறைகளும் ஒரு சேரச் செய்யப்படும்போது ரசனை முறைப் பார்வை என்கிற பேய் ஓடிவிடும் என்கிறார் மாஷெரி. அதாவது இவ்விரு வகைப் பார்வைகளும் ஒருமித்த பார்வைகளாய் முன் வைக்கப்படுகையில் ரசனையின் விதிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் எழுத்தாளனிடம் உருவாவதில்லை. இங்கு எழுத்து வடிவங்களைப் பற்றிய பிரச்சினை உருவாகிறது. எழுத்துக்கான வடிவங்களுடன் கருத்துருவ நிலை இணைந்தே இருக்கும். ஆக, வடிவத்தின் வரலாறு என்பது கருத்துருவ நிலைகளின் வரலாறாகிறது. உண்மையில் கருத்துருவ வரலாறும் வடிவ வரலாறும் இணைகோடுகள் என்றே சொல்ல வேண்டும். வடிவங்கள் கருத்துருவங்களால் மாறுவது போலவே நாம் சுயமாகவும் மாறமுடியும் என்பதினையும் நினைவில் கொள்ள வேண்டும்.

— தமிழவன்

நூல்கள் நெறிகளைச் சொல்கின்றன என்பது பெரும் மாயை. நெறிகளை வளைக்கும் முறையை மட்டுமே நூலகள் கற்பிக்கின்றன.

— ஜெயமோகன்

'கடவுள் உங்களிடம் வந்து அவரது வலது கையில் உண்மையையும், இடது கையில் உண்மையை நோக்கிய தேடலையும் வைத்திருக்கிறார் என்றால், கடவுளின் இடது கையையே திறக்கச் சொல்வேன்' என்று டோரிஸ் லெஸ்ஸிங் சொன்னார். உண்மையை விட உண்மையை நோக்கிய தேடலே முக்கியம் என்றார் அவர். ஏனென்றால், தேடல் என்பது எண்ணிக்கையில் அடங்காத அனுமானங்களைக் கொண்டது. ஆனால் உண்மை என்பது ஒரு பதிலில் அடங்கி விடுகிறது. இதை ஒரு கலைஞனால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? கலைஞனுக்குத் தேவையானது ஒரு புதிர்; உண்மை அல்ல.


— போர்ஹேஸ்

எழுத்தில் இரண்டு வகை உண்டு. Status Quo மற்றும் Transgressive. முதல்வகை எழுத்து அரசு, மதம், கல்வி நிறுவனங்கள், குடும்பம் மற்றும் இன்னோரன்ன சமூக அமைப்புகள் நமக்கு சிறுவயதிலிருந்தே போதிக்கும் மதிப்பீடுகளை அப்படியே ஏற்றுக்கொள்வது. இரண்டாவது வகை, அந்த மதிப்பீடுகளை எதிர்த்துக் கலகம் செய்வது.

— சாரு நிவேதிதா

# வலுவான அணி ஒன்றை ஜெனிவாவுக்கு அனுப்புங்கள்

## சம்பந்தனிடம் சங்கரி கோரிக்கை



(கொழும்பு)

மிகவும் பொருத்தமான உறுபபினர்களைக் கொண்ட குழு ஒனறை ஜெனிவாவுக்கு அனுபபுவதற்கு கூட்டமைப்பு முன்வர வேண்டும் என்று ஆனந்த சங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலுவானதொரு குழுவை ஜெனிவாவுக்கு அனுப்ப வேண்டும் என்று, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு கடிதம் ஒன்றின மூலமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரிக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

அப்பாவித் தமிழ் மக்களை பிறர் ஏமாற்றுவதை அனுமதிக்காமல் இருப்பதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலுவான குழுவொன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடருக்கு அனுப்ப வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரியான வழியில் அதன் கடமையை செய்வதற்கு, ஜெனிவாவுக்கு வலுவான குழுவொன்றை அனுப்ப வேண்டும் என்றும் தாம் இப்போது உணர்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் மட்டக்களப்பில் துரிதம்

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் மட்டக்களப்பில் நடைபெறவுள்ள மாவட்ட ரீதியிலான பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வேலைத் திட்டங்கள் தொடர்பிலான அறிவுறுத்தல் கூட்டம் தொடர்பான ஆயத்தக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், சுமார் 6000 பேர் கலந்து கொள்ளவுள்ள இம் மாவட்ட ரீதியான அறிவுறுத்தல் கூட்டத்துக்கான இடம், போக்குவரத்து, உணவு, மருத்துவ வசதிகள், ஏற்பாடுகள் உள்ளிட்ட அனைத்து விடங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

இக் கலந்துரையாடலில், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் எஸ்.கிரிதரன், மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் எஸ்.உதயகுமார், திணைக்களத்தலைவர்கள், பிரதி மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கல்விப் பணிப்பாளர்கள், உளளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் அதிகாரிகளுக்கான செயலமர்வு

## வினைத்திறனை அதிகரிக்க கிழக்கில் ஏற்பாடு

(கொழும்பு)

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் அனுசரணையுடனும் அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடனும் ஆசியா மன்றம் நடைமுறைப்படுத்தி வரும் உள்ளூர் பொருளாதார ஆட்சி செயற்றிட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளுக்கான "அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல்'' என்ற தொனிப் பொருளில் மூன்று நாள் வதிவிட செயலமர்வு மட்டக்களப்பு ஈஸ்ட் லகுன் ஹோட்டலில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் கலந்துகொண்டு செயலமர்வை ஆரம்பித்து வைத்தார்.

இங்கு முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜித், உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் டபள்யு.பி. பி.ஜி.விக்கிரமசிங்க, ஆசியா மன்றத்தின் பணிப்பாளர் கோபால குமார் கே தம்பி, பிரதிப் பணிப்பாளர் ஏ.சுபாகரன் ஆகியோர் உரையாற்றினர். அத்துடன் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை.சலீம் மற்றும் ஆசியா மன்றம் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வரும் ஐந்து மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட 15 உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

ஆசியா மன்றத்தின் நிகழ்சித் திட்ட உத்தியோகத்தர்களான எம்.ஐ.எம்.வலீத், றிசாட் சரீப், சசீகரன் ஆகியோர் நிகழ்வை நெறிப் படுத்தினர்.

# வந்தாறு மூலையில் விவசாயிகள் போராட்டம்

## யானைகளின் அச்சுறுத்தலை நீக்க கோரிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டு யானைகளின் அச்சுறுத்தலிலிருந்து தம்மை பாதுகாக்குமாறு கோரி ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வந்தாறுமூலை பிரதேசத்தில் விவசாயிகள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டனர்.



விவசாய அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இந்த ஆரப்பாட்ட பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெட்னம் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

வந்தாறுமூலை நீர்முகப் பிள்ளையார் ஆலய முன்றிலிலிருந்து ஆரம்பமான இந்த ஆரப்பாட்டம் பிரதான வீதியூடாக ஒரு கிலோமீற்றர் தூரத்தைக் கடந்து கமநல சேவைத் திணைகளத்தையடைந்தது.

மனிதனின் உயிர் பெறுமதி அற்றதா? யானைக் காடு எங்கள் பிரதேசம் அல்ல, நாங்கள் யானைக்கு எதிரானவர்கள் அல்ல, யானை வெடியோ மின்சார வேலியோ தேவையில்லை, எங்கள் காடு யானைகள் வளர்க்கும் இடம் அல்ல, யானைகளை சரணாலயத்திற்கு கொண்டு செல்லுங்கள், யானைக்கு எதிரானவர்கள் மனித உயிரை பலி கொள்ளாதீர்கள் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய கோசங்கள் எழுப்பியவண்ணம் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்பாட்ட முடிவில் மகஜர் ஒன்று பிரதேச செயலாளர் உ.உதயஸ்ரீதரிடம் கையளிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் காயப்பட்டு இறந்தவர்களின் குடும்பங்களுக்கும், பாதிக்கப்பட்ட உடமைகள் வீடுகள், நஷ்டஈட்டை வழங்கவேண்டும், யானை தங்கியிருக்கும் பற்றைக் காடுகளை துப்புரவு செய்தல் மற்றும் துப்புரவு செய்வதற்கான அனுமதி வழங்கல் யானைக்குரிய பாதுகாப்பு வேலி அமைத தல், ஏற்கனவே அமைக்கப்பட்ட வேலிகளை மறுசீரமைத்தல், உயிர் ஆபத்துக்களை ஏற்படுததும் யானைகளை வேறு இடங்களுக்கு வெளியேற்றுதல் போன்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

பரதேச செயலாளர் உ.உதயஸ்ரீதர் இங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

நீங்கள் வழங்கிய மகஜரில் குறிப்பிடப்பட்ட விடயங்களை மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கவுள்ளேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங் களுக்கு ஏற்கனவே தீர்வுகள் பெறப்பட்டிருந்தாலும் மக்க ளுக்கு யானைகளினால் அச்சுறுத்தல் உயிர் ஆபத்துகள் காணப்படு வதை என்னால் காணக்கூடியதாகவுள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத்தரும் நோக்குடன் எதர்வரும் 17 ஆம் திகதி மாவட்ட ரீதியான கூட்டம் நடை பெறவுள்ளது. அன்றையதினம் விவசாயிகள் கலந்துகொண்டு தமது பிரச்சினைகளை தெரிவிக்கலாம்.

யானைத் தாக்குதலினால் இறப்பவர்களுக்குரிய நஷ்டஈடுகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. யானைக்குரிய பாதுகாப்பு வேலிகள் தற்போது திருத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்றார்.

# பிரதி சபாநாயகர் மீது ஐ.தே.கட்சி கடுப்பு

(கொழும்பு)

பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடியின் நடவடிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. நுரைச்சோலை அனல் மின் நிலையம் தொடர்பில் நாடாளுமன்றில் விவாதம் நடாதத அனுமதி மறுக்கப்பட்டமை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என சுட்டிக்காட்டியுள்ளது.

அமர்வுகளை ஒத்தி வைப்பதன் மூலம் பிரதி சபாநாயகர் காட்டிய முன்னுதாரணம் மிகவும் பிழையானது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வாவின் ஆலோசனைக்கு அமைவாகவே, நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் நிலைமைகள் குறித்து கேள்வி எழுப்பி விவாதம் நடாத்தவே முயற்சி எடுத்ததாகவும் அதனைத் தடுத்து நிறுத்தும் வகையில் அரசாங்கம் செயற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அவையில் ஏற்பட்ட குழப்ப நிலைமைகள் காரணமாக எதிர்வரும் 18 ஆம் திகதி வரையில் அமர்வுகளை பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி ஒத்தி வைத்துள்ளார்.

# விளையாட்டு விழாவுக்கு விருந்தினர் யார்? தலையை குடையும் பாடசாலை நிர்வாகம்!

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது எல்லா பாடசாலைகளிலும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டிகள் இடம் பெற்று வருகின்றன.


பாடசாலைகளின் மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள என அந்த கல்விச் சமூகமே விளையாட்டுப்போட்டி நிகழ்வுகளில் மகிழ்ச்சியாக இருக்க அந்தந்த பாடசாலைகளின் அதிபர்கள் மிகவும் தர்மசங்கடத்தில் காணப்படுவதாக கிளிநொச்சி கல்வி வலயத்தில் பல அதிபர்கள் வெளிப்படையாக தெரிவித்துள்ளனர்.

இது தொட்பில் மேலும் தெரிய வருவதாவது வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளில் யாரை விருந்தினராக அழைப்பது என்பதிலேயே அதிபர்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.


வடக்கு மாகாண சபையை சேர்ந்தவர்களை அழைப்பதா அல்லது மத்திய அரசின் ஆளும் தரப்பைச் சேர்ந்தவர்களை அழைப்பதா என்பது தொடர்பிலேயே பாடசாலை அதிபர்கள் இந்த பரிதாப நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

வடக்கு மாகாண சபை தெரிவு செய்வதற்கு முன் மத்திய அரசின் ஆளும் தரப்பைச் சேர்ந்தவர்கள் தங்கள் பாடசாலைக்கு பௌதீக வளம் மற்றும் பல்வேறு உதவிகளை பெற்று பாடசாலையின் கல்விச் செயற்பாட்டை முன்னேற்றியுள்ளதாகவும் பாடசாலைகளில் நிலவி வந்த பல தீர்க்க முடியாத பிரச்சினைகள் இவர்கள் மூலம் தீர்வு பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் இதற்கான நன்றியுணர்வாக அவர்களை சார்ந்தவர்களை விருந்தினராக அழைத்தால் தாங்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் பழிவாங்கல் நடவடிக்கைக்கு ஆளாக வேண்டி நிலை ஏற்படலாம் எனத் தெரிவிக்கும் பல அதிபர்கள் மறுபுறம் மத்திய அரசின் ஆளும்தரப்பை சார்ந்தவர்களை விடுத்து வடக்கு மாகாண ஆளும தரப்பை சேர்ந்தவர்களை விருந்தினராக அழைத்தால் தங்க ளிடம் உதவிகளை பெற்று பாடசாலையினை வளர்த்து விட்ட நிலையில் தற்போது நன்றி மறந்தவர்களாக அதிபர்கள் உள்ளனர் எனற குறைக்கு உள்ளாக வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கும் பல அதிபர்கள் இந்த வருடாந்த இல்ல மெய்வலுநர் போட்டி நிகழ்வுகள் மூலம் தாங்களே மன உளைச்சலுக்கு ஆகியுள்ளதாகவும் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

அழைக்காமலும் செய்ய முடியாது அழைத்தாலும் நிம்மதியாகச் செய்ய முடியாது என்ற நிலையில் தங்களின் நிலைமை காணப்படுவதாக பல அதிபர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.(29)


22)  அருகில் காட்டப்பட்டுள்ள படத்தில் உள்ள இசைக்கருவியின் பெயர் என்ன?
i) மகுடி ii) புல்லாங்குழல் iii) நாதஸ்வரம் iv) ரம்பட்

23)  படத்தில் காட்டப்பட்டுள்ள சிறுவர் விளையாட்டு அசைவானது எதனைக் குறிக்கிறது.
i) வாத்துநடை ii) நண்டு நடை iii) நாய்நடை iv) கரடிநடை

24)  படத்தில் காட்டப்பட்டுள்ள உடுவின் பெயர் என்ன?
i) சிங்கம் ii) இரட்டையர்கள் iii) பெருநாய் iv) ஓராயின்

25) மாமிசத்தை உண்ணும் பறவையின் அலகு எது?


(i)


(ii)


(iii)


(iv)

26) கையில்பட்ட பலாப்பிசினை அகற்றப் பொருத்தமானது எது?
i) தண்ணீர் ii) தேங்காய் எண்ணெய் iii) சுடுநீர் iv) சவர்க்காரம்

27). நெத்தலியை உண்பதால் உடலிற்கு கிடைக்கும் போசணை பதார்த்தம் எது?
i) புரதம் ii) கொழுப்பு iii) விற்றமின் A iv) கல்சியம்

28) நாக்கை வெளியே வீசி உணவைப் பிடிக்கும் விலங்கு எது?
i) தவளை ii) முதலை iii) ஆமை iv) நாய்

29) வார்ணிஷ் கறையை நீக்கப் பொருத்தமான பொருள்
i) அசெற்றோன் ii) நீர் iii) சுடுநீர் iv) சவர்காரம்

30) நுளம்புகளினால் பரவக் கூடிய நோய் அல்லாதது
i) கொலரா ii) டெங்கு iii) யானைக்கால் iv) மலேரியா

31) நீரில் இட்டதும் அமிழக் கூடிய திரவம்
i) பெற்றோல் ii) இரசம் iii) மண்ணெண்ணெய் iv) தேங்காய் எண்ணெய்

32) $A_9$ எனும் வீதியால் இணைக்கப்படும் இரு நகரங்களும் எவை?
i) கண்டி - யாழ்ப்பாணம் ii) கண்டி - கொழும்பு
iii) கொழும்பு - புத்தளம் iv) கொழும்பு - யாழ்ப்பாணம்

33) பயிர்களின் வளர்ச்சிக்கு ஏற்றமண் எது?
i) தோட்டமண் ii) மணல் மண் iii) களிமண் iv) செங்கபிலமண்

34) கிழங்குத் துண்டங்களை நடுவதன் மூலம் கன்றுகளைப் பெறக் கூடியவை அல்லாதது
i) இஞ்சி ii) உருளைக் கிழங்கு
iii) வள்ளிக்கிழங்கு iv) மரவள்ளிகிழங்கு

35) வேலி ஓரங்களில் நடுவதற்கு மிகவும் பொருத்தமான பயிர்.
i) பாகல் ii) கோவா iii) தக்காளி iv) கத்தரி



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு



**பின்வரும் பாடலை படித்து வினாக்களுக்கு விடை தருக.**

**ஆறு போகிறது**

01) 1) புத்தம் புதிய நீரெடுத்து
புரண்டு உருண்டு விளையாடி
நித்தம் மகிழ்ந்து நீர் வழங்க
நீண்ட தூரம் பாய்வேன் நான்

2) அக்கம் பக்கம் வளம் செய்து
அருகில் மரங்கள் செழித்தோங்க
மக்கள் மகிழ்ந்து நீராட
மனம் உவந்து பாய்வேன் நான்

3) மரங்கள் செடிகள் பசுமை பெறும்
மலர்கள் பூக்கும் தேன் சிந்தும்
குரங்கு வெளவால் பறவையினம்
குதிக்கும் பறக்கும் பாய்வேன் நான்.

1) நித்தம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக
---
2) தூரம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக?
---
3) இரண்டாவது பாடலில் காணப்படும் இணைமொழியை எழுதுக?
---
4) பசுமை வெறுவன எவை?
---
5) மனம் உவந்து என்பதன் பொருளை எழுதுக?
---
6) செழித்தோங்க என்பதைப் பிரித்து எழுதுக?
---
7) பாடலில் இடம்பெற்றுள்ள உயர்திணைச் சொல்லை எழுதுக?
---
8) பாய்வேன் என்பதன் இறந்தகால வடிவத்தை எழுதுக?
---
9) மூன்றாவது பாடலில் இடம்பெற்றுள்ள பலவின்பால் சொல் ஒன்றை எழுதுக?
---
10) குரங்கு யாது செய்யும் என பாடலில் கூறப்படுகின்றது?
---
11) பின்வரும் நிகழ்கால வாக்கியத்தை எதிர்கால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.
பிள்ளை விளையாடுகிறது.
---
12) வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப்பிழையற்ற சொல்லை அடைப்புள்குள் இருந்து தெரிந்து எழுதுக.

i) ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை ------------------ செய்தல் வேண்டும்.
(ஒழுங்காகச், ஒலுங்காகச், ஒளுங்காகச்)

ii) சென்ற பசுக் கூட்டம் கன்றை நினைத்து வீடு திரும்புகிறது.
(மேச்சலுக்குச், மேய்சலுக்குச், மேய்ச்சலுக்குச்)

02) ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக?

i) பூக்கள் ------------------------------------------
ii) எலி ------------------------------------------
iii) விமானநிலையம் ------------------------------------------

03) பின்வரும் தொடர்களின் கருத்துக்களை தமிழில் எழுதுக.

i) Please bring some water ------------------------------------------
ii) Can I help you? ------------------------------------------
iii) Give me the book ------------------------------------------

04) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக

i) சுப அழுத் அவ்ருத்தக் வேவா ------------------------------------------
ii) எஸேம வே வா ------------------------------------------

*** 05 தொடக்கம் 27 வரையுள்ள வினாக்களில் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

05) இலங்கையின் தேசியக் கொடியின் உட்புறமாக நான்கு மூலைகளிலும் உள்ள நான்கு வெள்ளரச இலைகளும் நான்கு விடயத்தை வெளிப்படுத்துகிறது. அதில் ஒன்றாகிய 'மெத்தா' எதனைக் குறிக்கின்றது.
i) ஒற்றுமையைப் பலப்படுத்தல் ii) துன்பத்தில் இருந்து விடுதலை
iii) பிறரிடம் அனுதாபம் iv) எளிமை, சகிப்புத்தன்மை

06) ஒலிம்பிக் கொடியில் காணப்படும் ஐந்து நிறங்களைக் கொண்ட வட்டத்தில் ஆசியக் கண்டத்தை குறிக்கப்பயன்பட்டுள்ள வட்டத்தின் நிறம் யாது?
i) கறுப்பு ii) நீலம் iii) மஞ்சள் iv) பச்சை

07) எமது உடலில் பட்டவுடன் ஒட்டிக் கொள்ளக் கூடிய வித்து யாது?
i) சீதேவியார்செங்கழுநீர் ii) துத்திரி
iii) கடல் மாங்காய் iv) எரிக்கிலை

08) காகம் முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதற்காக தனது வாழ்விடத்தை, அமைத்துக் கொள்ளும் காலம் எது?
i) ஆனி, ஆடி ii) தை, மாசி iii) கார்த்திகை, மார்கழி iv) தை, மார்கழி

09) இலங்கையில் உள்ள மிகப்பெரிய குளம் எது?
i) பராக்கிரம சமுத்திரம் ii) கலாவாவி
iii) மின்னேரியாக்குளம் iv) சேனநாயக்கா சமுத்திரம்



10) மயிர்கொட்டி புழுக்களின் உணவு யாது?
i) இலைகள் ii) பழங்கள் iii) தானியங்கள் iv) பூச்சிகள்

11) இலங்கையில் விற்பனையாகும் மண்ணெண்ணெயின் நிறம் யாது?
i) வெள்ளை ii) நீலம் iii) சிவப்பு iv) பச்சை

12) கலண்டர்களில் காணப்படும் சிவப்பு நிறத்தில் அச்சிடப்பட்டுள்ள திகதிகள் எதனைக் குறிக்கின்றன.
i) விடுமுறை நாள் ii) நல்லநாள்
iii) அபாயகரமான திகதி iv) முஸ்லிம்களின் விடுமுறைநாள்

13) சமய இஸ்தலம் ஒன்றாக பிரசித்தி பெற்ற இடம் எது?
i) கதிர்காமம் ii) சீகிரிய iii) கலாவெவ iv) ஹிக்கடுவ


14) மாணவன் ஒருவன் தான் வெட்டி எடுத்த இலங்கை தேசப்படம் ஒன்றை கரு நீலநிற வார்னிஸ் கடதாசியின் மத்தியில் ஒட்டியிருந்தான். இதில் கருநீல நிறப்பகுதியினால் காட்டப்படுவது எது?
i) கடல் ii) தரைப்பகுதி iii) புற்றரை iv) மலை


15) நுளம்புகளை வரவிடாது தடுத்து வைக்கும் செடி எது?
i) துளசி ii) கொன்றை iii) கோரை iv) குப்பைமேனி

16) முலையூட்டிப் பறவை எது?
i) பருந்து ii) வௌவால iii) திமிங்கிலம் iv) காகம்

17) மனிதன் வயிற்றில் உள்ள குடற் புழுக்களை அகற்ற உட்கொள்ளும் தாவரம் எது?
i) வேம்பு இலைத் துவையல் ii) துளசி iii) கற்றாளை iv) குப்பைமேனி

18) திலாப்பியா மீன் தன் குஞ்சுகளை எவ்வாறு பாதுகாக்கும்?
i) வாயினுள் எடுத்து ii) செட்டையினுள்
iii) தூரஇடத்துக்கு அழைத்துச் சென்று iv) எதிரியுடன் சண்டையிட்டு

19) 
படத்தில் காட்டப்பட்டுள்ள விளையாட்டில் ஒரு குழுவில் பங்கு பற்றும் மிகக்கூடிய வீரர்களின் எண்ணிக்கை எத்தனை?
i) 16 ii) 12 iii) 10 iv) 09

20) 
படத்தில் காட்டப்பட்டுள்ள இவ்வுபகரணம் எதற்கு பயன்படுகின்றது.
i) சுவரின் நிலைக்குத்தை அறிய ii) சுவரை அளக்க
iii) சுவரின் சாய்வை அறிய iv) சுவரில் கோடிட

21) 
படத்தில் காட்டப்பட்டுள்ள வீதிச்சமிச்ஞை எதனை வெளிக்காட்டுகிறது?
i) சகலவாகனங்களும் செல்லலாம்
ii) சகலவாகனங்களும் செல்லத்தடை
iii) மோட்டார் வாகனங்களுக்கு வீதி மூடப்பட்டுள்ளது
iv) மோட்டார் வாகனங்கள் மாத்திரம் செல்லலாம்

# நிலைபேறான அபிவிருத்தியின் அறுவடை இது அமைச்சர் டக்ளஸ் வழங்கிய சொத்து

## மனம் திறந்து பேசுகிறார் வாழ்நாள் பேராசிரியர்





யுத்தம் நிறைவடைந்த பின்னர் வடக்கில் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு எடுக்கப்பட்டு வந்த முயற்சிகளின் அறுவடையை இப்போது வடக்கு மக்கள் அனுபவிக்க ஆரம்பித்துள்ளனர்.

இந்த வகையில் கிளிநொச்சியில அமைக்கப்பட்டுள்ள யாழ்பல்கலைக்கழக வளாகத்தின் உருவாக்கத்தினூடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடபகுதி மக்களுக்கு ஒரு நிலையான செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளார் என வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை அறிவியல் நகரில் அமையப்பெற்றுள்ள விவசாய பொறியியல் பீடங்களுக்கான கட்டடத் தொகுதிகளின் மீள் கட்டுமாணப் பணிகளை அமைச்சர் பார்வையிட்டபின் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் உரை யாற்றுகையில்,

1980 ஆம் ஆண்டு கிளிநொச்சியிலே விவசாய பீடத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பின்னர் பேராசிரியர் துரைராஜா அவர்களின் காலத்தில் நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி 1990 ஆம் ஆண்டு விவசாய பீடத்தை கிளிநொச்சியிலே ஆரம்பித்தோம்.

ஆனால், முதல் முதலாக நியமிக்கப்பட்ட பீடாதிபதி அப்பீடத்தை பொறுபேற்கும் முன்னதாகவே மரணித்து விட்டார். பின்னர் அடுத்ததாக நியமிக்கப்பட்ட பீடாதிபதி பீடத்தை பொறுப்பேற்றி ருந்த நிலையில் மரணமாகிவிட்டார். அதன் பின்னரும் நாம் முயற்சியைக் கைவிட வில்லை. தொடர்ந்து ஐந்து வருடங்கள் இப்பீடத்தினை இயக்கி வந்தோம். ஆனால், அன்று விரிவுரையாளர்களாக கடமை யாற்றிய ஐந்து பேரும் விவசாயத் துறையை சாராத விரிவுரையாளர்களாக இருந்தபோதும் விரிவுரைகளை சிறப்பாக மேற்கொண்டு வந்தார்கள் எனக் குறிப்பிட்ட அவர், இவ்வாறு படிப்படியாக வளர்ச்சி கண்டு வந்த நிலையில் 1996 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் ஏற்பட்ட யுத்தத்துடன் விவசாய பீடத்தின் செயற்பாடுகள் யாவும் முடங்கிப்போனது.

அதன் பின்னர் வசந்தி அரசரத்தினம் உள்ளிட்ட சிலர் மருத்துவ பீடத்தில் முக்கிய பதவி நிலையில் இருந்ததனால் அவர்களின் உதவியுடன் விவசாய பீடத்தை மருத்துவ பீடத்தின் ஒரு பகுதியில் வைத்து இயக்கி வந்தோம். பின் அயல் காணியில் மூன்று சிறிய கட்டடங்களை அமைத்து விவசாய பீடத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தோம். ஆனால், இன்று இப்பீடத்திற்கு மிகப்பெரும் வளாகம் கிடைத்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. பீடாதிபதி மிகுந்தன் மற்றும் சிவமதி ஆகியோர் மிகுந்த ஆவலுடன் இப்பீடங்களை வளப்படுத்தி வருகின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

மேலும் 1978 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் விவசாய பீடத்தினை அமைக்க வேண்டும் என்ற நோக்கில் சிவப்பிரகாசப்பிள்ளை வைத்தியர் குமார்பேபி ஆகியோர் உட்பட்ட குழுவினர் கிளிநொச்சிக்கு வருகை தந்து காணிகளையும் பார்வையிட்டதோடு அதற்கான முயற்சிகளையும் முன்னெடுத்தார்கள் இதேவேளை, 1978 ஆம் ஆண்டிலிருந்தே பொறியியல் பீடத்தையும் இங்கு கொண்டு வருவதற்காக பேராசிரியர் நித்தியானந்தன் அவர்களும் பின்னர் பேராசிரியர் துரைராஜா அவர்களும் முயற்சிகளை மேற்கொண்டு வந்தார்கள். ஆனால், அம்முயற்சி கைகூடவில்லை.

ஆயினும் 2002 ஆம் ஆண்டு இப் பொறியியல் பீடத்தை கிளிநொச்சியில் இயக்குவதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றபோதும் அதை ஆரம்பிப்பது தொடர்பான ஸ்திரமற்ற நிலைப்பாடுகள் காணப்பட்டதனால் அந்த சந்தர்ப்பமும் கைநழுவிப்போனதாக தெரிவித்தார்.

இந்த பீடங்களுக்கான காணியைப் பெறுவதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மிக அதிகமாக முயற்சித்துள்ளார். கொக்காவில் தொலைத் தொடர்பு கோபுரத்தின் திறப்பு விழாவின் போது பல்கலைக்கழகமாக உருவாக வேண்டும் என்ற நோக்கில் தெரிவு செய்யப்பட்ட இக்காணி தொடர்ந்தும் அதேநோக்கிற்காக பயன்படுத்த வேண்டும் என்ற சிந்தனையுடன் அவர் ஜனாதிபதியிடம் இக்காணியைப் பெறுவதற்கான கோரிக்கையை விடுத்தார்.

அமைச்சரின் கோரிக்கைக்கு மறுப்பு தெரிவிக்க முடியாத ஒரு நிலைப்பாட்டின் அடிப்படையிலும் ஜனாதிபதி அமைச்சரின் மீது கொண்டிருக்கும் பற்றின் பிரகாரமும் அக்காணியை பெற்றுத்தருவதற்கு மாண்புமிகு ஜனாதிபதி ஒப்புதலளித்தார் என சுட்டிக்காட்டினார்.

பொதுவாக இக்காணியைப் பெறுவதென்பதில் பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கவேண்டிய நிலை காணப்பட்டது. ஆனால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மிக நேர்த்தியான அரசியல் அணுகுமுறையினூடாக விலைமதிப்பற்ற சொத்தை இன்று யாழ்.பல்கலைக்கழகம் பெற்றிருக்கின்றது. எனவும் குறிப்பிட்ட பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை,

அமைச்சர் தொடர்ந்தும் இப்பல்கலைக்கழகத்தின் மேம்பாட்டுக்கு பங்காற்றத் தயாராகவே உள்ளார். அவ்வாறான பரந்த மனப்பாண்மை கொண்டவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள். அவர் இவ்விரு பீடங்களும் இங்கு இயங்குகின்ற நிலையில் இப்பகுதியை யாழ். பல்கலைக்கழகத்தின் வளாகமாக மாற்றுவதற்கும் முயற்சித்து வருகின்றார். மேலும் இங்கு புதிய பீடங்களையும் துறைகளையும் இயக்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கமைவாக விளையாட்டுத் துறையை இங்கு இயக்குவதற்கு சாத்தியமான சூழல் நிலவுவதனால் அதனை பொறுப்பேற்பதற்கு விவசாய பீடமும் தயாராக இருக்கின்றது. எனவே அத்துறை நிச்சயமாக இங்கு ஆரம்பமாகும். எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தின் மேம்பாட்டில் மாண்புமிகு ஜனாதிபதி மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் ஆகியோர் மிகுந்த அக்கறை காட்டிவருகின்றனர். எனவே கிளிநொச்சி மாவட்டம் விரைவான மேம்பாட்டை எட்டும் என்பதில் ஐயமில்லை. கிளிநொச்சி அவ்வாறான மேம்பாட்டை எட்ட வேண்டியதும் அவசியமானது. ஏனெனில் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்வதற்கு பொருத்தமற்றதாகவே யாழ். மாவட்டம் காணப்படுகின்றது.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்பு யாழ். மாவட்டத்தில் மிக அதிகளவான சனத்தொகை குறைவடைந்துள்ளது. இல்லாதுவிடின் அங்கு சுமார் 11 இலட்சம் வரையான மக்கள் வாழவேண்டிய நிலை உருவாகியிருக்கும். அவ்வாறு இருப்பின் அங்கு இன்றிருப்பதை விடவும் நீர்ப்பிரச்சினையும் மற்றும் தொழில்வாய்ப்பு உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளுக்கும் மக்கள் முகம் கொடுக்க நேரிட்டிருக்கும் எனவும் குறிப்பிட்டதோடு யாழ். மாவட்ட மக்களும் இப்பகுதிகளில் வந்து குடியேறுவதற்கான காணிகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு அனைவரும் துணைபுரியவேண்டும் எனவும் வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆறுகால் மடத்தில் விபத்து பெண் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் பகுதியில் நேற்றுக் காலை வடிவாகனமும் சூட்டி பிளஸ் மோட்டார் சைக்கிளும் விபத்துக் குள்ளானதில் பெண் ஒருவர் படுகாயங்களுக்கு இலக்காகியதுடன் ஒருவர் யாழ். பொலிஸாரினால் தடுத்து வைக் கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இவ் வீதிவிபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சித்தங்கேணியைச் சேர்ந்த வரதராசா கேமலதா என்ற பெண்ணே காயங் களுக்குள்ளாகியதுடன், சம்பவத்தில் சம்பந்தப்பட்ட வடி வாகனத்தின் சாரதியே யாழ். பொலிஸாரால் தடுத்து வைக்கப் பட்டிருப்பதாக மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ்.நகர்ப் பகுதியில் நடைபெற்ற மற்றுமொரு மோட்டார் சைக்கிள் விபத்தில் மேலும் ஒரு பெண் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையின் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(பா)

# வைரஸ் காய்ச்சல் கரவெட்டி வாசி மரணம்

(யாழ்ப்பாணம்)

இனம்தெரியாத வைரஸ் காய்ச்சல் காரணமாக நேற்று முன் தினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட ஆண் ஒருவர் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு மரணமாகியுள்ளார்.

கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் பணிபுரியும் சுந்தரலிங்கம் சுதாகரன் (வயது-32) என்பவரே இவ்வாறு மரணமாகியுள்ளார்.

இவருக்கு சில நாட்களாக காய்ச்சல் ஏற்பட்டதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அங்கு மரணமாகயுள்ளார்.

இவரது மரணம் குறித்து அறியும் முகமாக மருத்துவ பரி சோதனை மேற்கொள்ள நட வடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(பா)




வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................


கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

# அறிவியல் துறையில் இந்தியா எங்கே நிற்கிறது

## வெளியாகியது பரபரப்பு தகவல்



அறிவியல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறையில் அமெரிக்கா, சீனாவை விட இந்தியா மிகவும் பின்தங்கி உள்ளதாக அமெரிக்காவின் ஆய்வறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது. அறிவியல்மையம் வெளியிட்ட அறிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறைக்கு உலக அளவில், 2011இல், 14,350 கோடி அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்பட்டன. இத்தொகையே தற்போது வரை நீடிக்கிறது.

2001-ஆம் ஆண்டுடன் (7530 கோடி டொலர்கள்) மொத்த முதலீட்டை ஒப்பிடும்போது சராசரியாக 6.7 சதவீதம் உயர்ந்துள்ளது.

அமெரிக்கா 2010இல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறையில் அமெரிக்காவின் பங்கு 4070 கோடி டொலர்களாகவும், 2011இல் 4240 கோடி டொலரகளாகவும் உயர்ந்தது. தற்போது வரை அந்நாடு முதலிடத்தையே வகித்து வருகிறது. அதன் முதலீடு, 2011இல் உலக அளவிலான முதலீட்டில் 30 சதவீதத்துக்கு குறைவாக இருநதது.

2001 இல் உலக அளவிலான முதலீட்டில் 37 சதவீதமாக இருந்த அமெரிக்காவின் பங்கு சதவீதம் படிப்படியாக குறைந்ததை அடுத்து மற்ற நாடுகளின் பங்கு சதவீதம் உயர்ந்துள்ளது.

சீனா:- 2011இல் சீனா 2080 கோடி டொலர்களை முதலீடு செய்து இரண்டாமிடத்தில் உள்ளது. இந்த முதலீடு அமெரிக்காவின் முதலீட்டில் பாதியாகும். ஜப்பான் -1470 கோடி டொலர்களை முதலீடு செய்து ஜப்பான் மூன்றாமிடத்தில் உள்ளது.

இந்தியா-கடந்த 2007இல் இந்தியா 240 கோடி டொலர்களை முதலீடு செய்துள்ளது. இதே நிலைதான் தற்போதும் நீடித்து வருகிறது. இந்த விவரம், ஆராய்ச்சித் துறையில் இந்தியா மிகவும் பின்தங்கி உள்ளதையே காட்டுகிறது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பள்ளத்தாக்கில் கவிழ்ந்தது பஸ் 14 பயணிகள் மரணம்



(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் மெட்ரோ மணிலாவில் இருந்து மலை பகுதியில் உள்ள போன்டோக் நகருக்கு இரவில் ஒரு பஸ் புறப்பட்டுச் சென்றது. அதில் சாரதி மற்றும் ஓட்டுநர் உடபட 40 பேர பயணம் செய்தனர்.

அந்த பஸ் மலை மீது 500 மீற்றர் உயரத்தில் சென்ற போது கட்டுப்பாட்டை இழந்து ரோட்டோரத்தில் உள்ள பள்ளத்தாக்கில் கவிழ்ந்தது. அதில் 9 பேர் அதே இடத்தில் பரிதாபமாக இறந்தனர்.

விபத்தில் காயம் அடைந்தவர்களை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி மேலும் 5 பேர் பலியாகினர். அவர்களில் டென்மார்க்கைச் சேர்ந்த ஒரு பெண்ணும், 2 குழந்தைகளும் அடங்குவர். இவர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு சுற்றுலா வந்திருந்தனர்.

உலகச் செய்திகள்

# தலிபான்கள் வசமாகியது அமெரிக்க மோப்பநாய்

(காபூல்)



ஆப்கானிஸ்தானில், தலிபான் பயங்கரவாத அமைப்பை ஒடுக்குவதற்காக, அமெரிக்க இராணுவத்தினர், 2001லிருந்து, அந்நாட்டில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர். தலிபான்கள் பதுங்கியுள்ள இடங்களையும், அவர்கள் பதுக்கி வைத்துள்ள ஆயுதங்களையும் கண்டறிவதற்காக, அமெரிக்க இராணுவத்தில், மோப்ப நாய்கள், பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன.

இந்நிலையில், "கர்னல்" என அழைக்கப்படும், இராணுவ நாயை, கடந்த இரண்டு மாதங்களாக காணவில்லை. இந்த நாயின் கழுத்து பட்டையில், ஜி.பி.எஸ்., எனப்படும், இருப்பிடம் காட்டும் கருவியும், கமரா, டார்ச் ஆகியவை பொருத்தப்பட்டு உள்ளன. இந்தக் கருவியை வைத்து, அமெரிக்க மோப்ப நாய், தலிபான்களிடம் சிக்கியுள்ளது தெரிய வந்துள்ளது. தலிபான் தளபதி ஒருவர், இந்த செந்நிற நாயை வைத்திருக்கும் வீடியோ படமும், சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

# இரத்தம் இல்லாமல் பிரசவித்த குழந்தை

## உயிர் தப்ப வைத்தனர் மருத்துவர்கள்

உடலில் சிறிதளவு இரத்தம் கூட இல்லாமல் பிறந்த குழந்தை உயிர் பிழைத்துள்ளது. கலிபோர்னியாவின் ஆரஞ்ச் நகரில் கடந்த மாதம், ஜெனிபர் ஜுரேஸ் என்பவருக்கு, குழந்தை ஒன்று பிறந்தது.

பிரசவ காலத்திற்கு மூன்று வாரங்களுக்கு முன்பாகவே பிறந்த இக்குழந்தை, வெளிறிய நிலையில் காணப்பட்டது.

சந்தேகம் அடைந்த மருத்துவர்கள் சோதனை செய்து பார்த்த போது, குழந்தையின் உடலில் ஒருதுளி இரத்தம் கூட இல்லை என்பது தெரிய வந்தது.

மருத்துவர்களின் கணிப்பின் படி இக்குழந்தை கிட்டதட்ட 80 சதவிகித இரத்தத்தை தாயின் கர்ப்பத்திலேயே இழந்துள்ளது, இது கடுமையான இரத்த சோகையைக் குறிக்கிறது.

பிரசவத்திற்கு மூன்று வாரத்திற்கு முன்பே, குழந்தையிடம் எவ்வித அசைவும் இல்லாததால் மருத்துவரை அணுகியுள்ளார் ஜெனிபர்.

இதனையடுத்து அறுவை சிகிச்சையின் மூலம் குழந்தையும், தாயும் காப்பாற்றப்பட்டனர்.



ஜெனிபரின் முன்னெச்சரிக்கையான நடவடிக்கையே அவரையும்,அவரது குழந்தையையும் காப்பாற்றியுள்ளது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இக்குழந்தை உயிருடன் பிறந்தது மிகப்பெரிய அதிசயமாக கருதப்படுகிறது, இக்குழந்தையை பரிசோதித்த பிறகே நேரடியாக கருவிலேயே ரத்த இழப்பு ஏற்பட்டுள்ளதை கண்டறிந்தோம் என சாரோன் பிலிகிரிம் என்ற தாதி தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் பாலியல் சுரண்டல் சிறார்களைப் பாதிக்கும் அவலம்

## திருச்சியில் அரங்கேறிய நெஞ்சை உலுக்கும் சம்பவம்

(மலைக்கோட்டை)

திருச்சியில் உள்ள அரச மருத்துவ மனைக்கு நேற்று காலை ஒரு பெண் 2 குழந்தைகளுடன் பதறியபடி வந்தார். அந்தக் குழந்தைகள் மயக்க நிலையில் இருந்தன. உடனடியாக அந்தக் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டன. அந்தக்குழந்தைகளுக்கு என்ன நேர்ந்தது? என்று கேட்டபோது அந்தப் பெண் கொடுத்த தகவல் அதிர்ச்சி அடைய செய்தது.

2 குழந்தைகளும் மதுபோதையில் இருந்து மீள முடியாமல் தவித்தமை சிகிச்சையின்போது அனைவரையும் கலங்கடித்தது. இதற்கு காரணம் குழந்தைகளின் தாய் பாத்திமா, அவரது கணவர் ஜலால் என்பவர் அவரை விட்டுப்பிரிந்து சென்றுவிட்டதால் 2 குழந்தைகளுடன் திருச்சி நத்தர்ஷா பள்ளிவாசல் பகுதிகளில் யாசகம் பெற்று பிழைப்பு நடத்தி வந்தார்.

அவர்களுக்கு தங்க வீடு எதுவும் இல்லாததால் தெரு மற்றும் பிளாட்பாரங்களில் தங்கியிருந்து வருகிறார். இந்தநிலையில் நேற்று இரவு பாத்திமாவை தேடி வாலிபர் ஒருவர் வந்துள்ளார். அப்போது குழந்தைகள் இருவரும் தூங்காமல் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இதனால் அந்த வாலிபர் கொண்டு வந்த மதுவை வாங்கிய பாத்திமா, தனது குழந்தைகள் யாசிக் அன்சாரி (வயது 5), பரக்கத் நிஷா (வயது 2) ஆகியோருக்கு கொடுத்துள்ளார். அதனை குடித்த சிறிதுநேரத்தில் அவர்கள் மயங்கிவிட்டனர்.

அந்த நேரத்தில் வாலிபர் பாத்திமாவுடன் உல்லாசம் அனுபவித்துள்ளார். காலையில் வழக்கம்போல் குழந்தைகள் விழிக்கவில்லை என்பதால் பதட்டம் அடைந்த பாத்திமா, அரசு ஆஸ்பத்திரிக்கு அவர்களை தூக்கிக்கொண்டு விரைந்து வந்துள்ளார்.

இந்த தகவல் பொலிஸாருக்குத்தெரியவந்தது. இதனையடுத்து பாத்திமாவிடம் விசாரணை நடத்த பொலிஸார் முடிவு செய்துள்ளனர். பாத்திமாவுடன் உல்லாசம் அனுபவித்த அந்த வாலிபர் அவரது தாயாரின் கள்ளக்காதலனாவும் இருந்து வந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. இதேபோல் திருச்சி மாநகரில் பல்வேறு இடங்களில் தொடர்ந்து அத்துமீறல்கள் நடந்து வருகிறது.

# ஐஸ்லாந்து மீது பொருளாதாரத் தடை

திமிங்கிலங்களை வேட்டையாடுவதன் மூலம் சர்வதேச ஒப்பந்தத்தை மீறி ஐஸ்லாந்து செயற்படுவதாக அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது. இதனால் அந்நாட்டின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐஸ்லாந்தின் செயல் சர்வதேச வர்த்தக ஒப்பந்தத்தை மீறியதாக உள்ளது என்று அமெரிக்க உள்துறை அமைச்சகம் ஒபாமாவுக்கு பரிந்துரை வழங்கியுள்ளது. நட்பு நாடான ஐஸ்லாந்து மீது பொருளாதாரத் தடை விதிப்பது குறித்து முடிவெடுக்க ஒபாமாவுக்கு 60 நாள்கள் உள்ளது. 2011ஆம் ஆண்டு இதேபோன்ற நிலை ஏற்பட்டபோது, தூதரக உறவு பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக பொருளாதாரத் தடை விதிக்கும் பரிந்துரையை ஒபாமா நிராகரித்தார்.

ஐஸ்லாந்து மற்றும் நோர்வே ஆகிய இரு நாடுகள் மட்டுமே 1986 ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட சர்வதேசத் தடையை மீறி வர்த்தக நோக்குடன் திமிங்கிலங்களை வேட்டையாடி வருகின்றன. சர்வதேசத தடையை பின்பற்றி வருவதாக தெரிவிக்கும் ஜப்பான் ஆராய்ச்சி என்ற பெயரில் ஆண்டுக்கு நூற்றுக்கணக்கான திமிங்கிலங்களைக் கொன்று குவிக்கிறது.

ஐஸ்லாந்து, திமிங்கில இறைச்சியை குறைவான அளவே நுகர்வு செய்தாலும் அதிக அளவில் ஜப்பான் சந்தைக்கு ஏற்றுமதி செய்கிறது. தற்போது 2014ஆம் .ஆண்டுக்கான ஏற்றுமதி வரம்பை 383 திமிங்கிலங்களாக அது அதிகரித்துள்ளது.

அமெரிக்க உள்துறை அமைச்சர் சாலி ஜுவல், "வர்த்தக வேட்டையால் அழிவை நெருங்கி வந்த திமிங்கிலங்களைக் காப்பாற்றி, அவற்றின் எண்ணிக்கை உயர, 1986ஆம் ஆண்டு சர்வதேச தடை உதவி புரிந்துள்ளது" என்று ஒபாமாவுக்கு அளித்துள்ள பரிந்துரையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த இயற்கை வளங்கள் பாதுகாப்பு மன்றத்தைச் சேர்ந்த டேரின் கீகோவ் ஹீமர், "தாற்காலிகமாக வருமானம் தருவதாக இருந்தாலும், ஐஸ்லாந்தின் இந்தச் செயல் ஏற்றுக்கொள்ள இயலாதது மற்றும் கொடூரமானது என்றும் கூறினார்.

# விழிப்புலனற்றோர் சங்கம் வழங்கியது வெள்ளைப் பிரம்பு



வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தினால் பார்வையிற்ற 20 பேருக்கு புலம்பெயர் நாட்டில் இயங்கி வரும் நம்பிக்கை ஒளி என்ற அமைப்பின் ஊடாக வெள்ளைப் பிரம்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு வன்னி பார்வையற்றோர் சங்கத்தின் தலைவர் எஸ்.ரூபராஜ் தலைமையில் பரந்தனில் அமைந்துள்ள வன்னி விழிப்புலனற்றோர் சங்க அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் மகாதேவ சைவ சிறுவர் இல்லத்தின் தலைவருமான தி.இராசநாயகம், இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் பங்குத்தந்தை றிச்சாட் ஆகியோர் கலந்துகொண்டு சுயமாக நடமாடக்கூடிய இருபது பேருக்கு வெள்ளைப் பிரம்புகளை வழங்கிவைத்தனர்.

# மன்னாரில் காலபோகம் மழையின்மையால் பாதிப்பு

மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்படவிருந்த 2013, 2014 இற்கான காலபோகம இம் முறை பருவமழை பெய்யாததினால் பாதிப்படைந்துள்ளது.

இம்முறை மன்னார் நானாட்டான் முசலி மாந்தை மேற்கு மடு ஆகிய பிரதேசப் பிரிவுகளுக்கு உட்பட்ட 12 கமநல சேவை நிலையங்களிலும் 2013-2014 இற்கான காலப்போகம் 20834.4 ஹெக்டெயர் நிலப் பரப்பில் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், இம் முறை பருவமழை பெய்யாததின் காரணத்தினால் 5616.8 ஹெக்டேயரிலேயே மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தற்பொழுது 385 ஹெக்டெயர் விவசாயம் பாதிப்பு அடைந்துள்ளதாகவும் 337 குடும்பங்கள் இதனால் பாதிப்பு அடைந்துள்ளதாகவும் இத் தொகை மேலும் அதிகரிக்கலாம் என விவசாயிகள் தெரிவிப்பதாகவும் மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள வட்டாரம் தெரிவித்துள்ளது.

# கல்வி மேம்பாட்டினைக் கருதி மாணவர்களுக்கு இலவச சேவை

மன்னார், மாந்தை மேற்குப் பிரதேச மாணவர்களின் கல்வி மேம்பாட்டினை கருத்தில் கொண்டு மன்னார் தனியார் போக்குவரத்துச்சங்கம் பாடசாலை மாணவர்களுக்கு இலவச போக்குவரத்துச் சேவையினை மேற்கொண்டு வருகின்றது.



மன்னார், மாந்தை மேற்குப் பிரதேசத்தில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகள் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து பின்னர் 2010 ஆம் ஆண்டு மீள் குடியேறியுள்ளனர்.

இந்நிலையில், கடந்த நான்கு வருட காலங்களாக அப்பகுதிகளில் கல்வி கற்கும் மாணவர்களின் பெருளாதார நிலையினைக் கருத்திற்கொண்டு மன்னார் தனியார் போக்குவரத்து துறையினர் கட்டணங்கள் அறவிடாமல் மாணவர்களுக்கு போக்குவரத்து சேவையினை வழங்கி வருகின்றனர்.

சேவா கிராமம், மூன்றாம் பிட்டி, தேவன்பிட்டி இலுப்பைக்கடவை ஆகிய கிராமங்கள் ஒவ்வொன்றும் மன்னார் ஏ32 பிரதான வீதியிலிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருக்கின்றன.

இக்கிராமங்களுக்கு உள்ளக வீதிகளினூடாக பயணிக்கும் மன்னார் தனியார் பேருந்துகள் அங்கிருந்து மாணவர்களை பாடசாலைக்கு ஏற்றி இறக்கும் சேவையினை தொடர்ந்தும் இலவசமாக முன்னெடுத்து வருகின்றன.

இதேவேளை, மேற்குறித்த கிராமங்களுக்கான உள்ளக வீதிகள் குண்டும் குழியுமாக இருப்பதனால் பேருந்துகளைச் செலுத்துவதில் சாரதிகள் அதிக சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

## ஜப்பான்...

இரு பிரதான முதலீட்டாளர்க ளான ஜப்பான் மற்றும் தென் கொரியாவுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வருவதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள் ளது.

இராஜதந்திர வட்டாரங்கள் வெளியிட்டுள்ள தகவல்களின் படி, 47 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், ஆசிய, பசுபிக் பிராந்தியக் குழுவில் இலங்கையின் நிலையை மேலும் பலவீனப் படுத்துவதில் அமெரிக்கா அக்கறை கொண்டுள்ளது.

கடந்த ஆண்டு அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் ஜப்பான் நடுநிலை வகித்தது. தென் கொரியா ஆதரவு அளித்தது.

மொத்தம் 47 நாடுகளைக் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த ஆண்டு தீர்மானத்துக்கு 25 நாடுகள் ஆதரவளித்தன.

13 நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன. 8 நாடுகள் நடுநிலை வகித்தன. ஒரு நாடு சமூகமளித்திருக்கவில்லை.

2012 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை, 24 நாடுகள் ஆதரித்தன, 15 நாடுகள் எதிர்த்தன. 8 நாடுகள் நடுநிலை வகித்திருந்தன.

அப்போது தென்கொரியாவும், ஜப்பானும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் உறுப்பு நாடுகளாக இருக்கவில்லை.

ஆசிய,பசுபிக் குழுவில் இடம்பெற்றிருந்த இந்தியா இந்த இரண்டு தீர்மானங்களையும் ஆதரித்திருந்தது.

கடந்த ஆண்டுகளில் தீர்மானத்தை எதிர்த்த சீனா, பாகிஸ்தான், இந்தோனேசியா, குவைத், மாலைதீவு, பிலிப்பைன்ஸ், சவூதி அரேபியா ஆகிய ஆசிய பசுபிக் குழு நாடுகள், இம்முறையும் அதேகுழுவில் இருக்கின்றன.

இம்முறை, இந்தியா தீர்மானத்துக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும் என்று அமெரிக்கா கோரியுள்ளது.

ஆசிய பசுபிக் குழுவில் இம்முறை வியட்னாம் இடம்பெற்றுள்ளது இலங்கைக்கு சாதகமான விடயம் என்று இலங்கை அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, புதிதாக ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்குத் தெரிவாகியுள்ள தென்னாபிரிக்காவுக்கும், தீர்மானத்தை ஆதரிக்கும்படி கடுமையான அழுத்தங்கள் கொடுக்கப்படும்.

தென்கொரியா மற்றும் ஜப்பான் மீது விடுதலைப் புலிகளால் அழுத்தங்கள் கொடுக்க முடியாது போனாலும், தென்னாபிரிக்கா மீது அவர்களால் அழுத்தங்களைக் கொடுக்க முடியும் என்றும் ஐலன்ட் மேலும் தெரிவித்துள்ளது.

## இந்திய...

அந்தக் குழு சாத்தியமான தீர்வுத் திட்டங்களையும் உருவாக்கியது. ஆனால், அதன்பிறகு ராஜபக்ஷ இந்த விடயத்தில் ஆர்வம் காட்ட வில்லை.

இலங்கையில் வட.கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழர்களுக்கு உரிமை அளிக்கும் வகையில் அரசியல் சாசனத்தின் 13 ஆவது சட்டத் திருத்தத்தை அமுல்படுத்த இந்தியா முயற்சி மேற்கொண்டது. ஆனால், இலங்கை அரசாங்கம் அந்தச் சட்டத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவில்லை.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள், தங்கள் வசிப்பிடங்களுக்கு மீள்குடியேற்றம் செல்ல முடியவில்லை. வளர்ச்சித் திட்டங்களுக்கு என்று சொல்லி தமிழர் பகுதியில் 500 ஏக்கர் நிலம் இராணுவத்துக்கு எடுக்கப்பட்டு அவர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்படுகின் றன. தமிழர் பகுதிகள் சிங்கள மயமாக்கப்பட்டு வருகின்றன.

ஒருமித்த நாட்டுக்குள் எந்தவித குந்தகமும் இல்லாமல் விவசாயம், தொழில், வியாபாரத்தோடு நாங்கள் வாழ்ந்தால் போதும். இந்தியாவில் மாநிலங்களுக்கு என்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதோ அத்தகைய அதி காரத்தைத்தான் இலங்கையில் நாங்களும் எதிர்பார்க்கிறோம்.

நாங்கள் தனி ஈழத்தைக் கேட்கவில்லை. இந்த விடயத் தில் இந்தியாவின் உதவியை எதிர்பார்க்கிறோம் என சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார்.

## அச்சுவேலி...

தெரிவித்துள்ளார்.

இதன்போது, கைத்தொழிற் பேட்டைக்குத் தேவையான நீர் மற்றும் தொழிற்பேட்டையி லிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட நிலையில், சீமெந்தாலான கழிவுநீரை தொட்டியொன்றில் சேமித்து அதனை வடிகட்டி மீண்டும் பயன்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், தொழிற்பேட்டை வளாகத்தில் மழைநீரைச் சேகரிப்பதன் ஊடாக தொழிற்துறை நடவடிக்கைகளுக்கு அதனைப் பயன்படுத்துவது மற்றும் தொழிற்பேட்டையையும் அதன் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

இதன்போது முக்கியமாக தொழிற்துறை முதலீட்டாளர்களுக்கு தேவையான காணிப்பங்கீடுகள், காணிகளின் அளவீடுகள் மற்றும் தொழிற்துறை நடவடிக்கைகள் குறித்து முதலீட்டாளர்களிடம் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன், தொழிற்பேட்டை வளாகத்தில் பயன்தரு மரக் கன்றுகளை நாட்டுவதுடன் வளாகத்தை அழகுபடுத்துவதன் அவசியம் குறித்து தெளிவுபடுத்திய அமைச்சர் மரக்கன்றுகளை நாட்டு வதற்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறும் துறைசார்ந்தோருக்குப் பணிப்புரை விடுத்தார்.

இதனிடையே முதலீட்டாளர்களது தேவைகள் பிரச்சினைகள் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

இதன்போது கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன், கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப் பணிப்பாளர் சிவகெங்காதரன், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் ஜீவபாபு, அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன், ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் ஐங்கரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## சமாதானத்தை...

பயன்படுத்தி, செய்ய முயற்சிக்கின்றனர்.

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் சேவையாற்றிய தலைவர்களை, வெளிநாட்டு சக்திகள் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்து பதவி கவிழ்த்துள்ளன.

நாட்டின் வளங்களை அபகரித்துக் கொள்ளும் நோக்கில் இவ்வாறு உள்நாட்டில் பிரச்சினைகளை ஏற்படுத்த சில சக்திகள் முயற்சிக்கின்றன.

இலக்கு ஒன்று இருந்தால் அதனை அடைவது முடியாத காரியமல்ல என்பதனை யுத்தத்தை முடிவுறுத்தி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உலகிற்கு பாடம் புகட்டியுள்ளார்.

அரசாங்கத்தை கவிழ்க்கும் நோக்கில் சர்வதேச சக்திகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் தீர்மானம் நிறைவேற்றி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யுத்த ...

கிளிநொச்சியைச் சேர்ந்த சுப்பிரமணியம் விதுசன், அல்வாயைச் சேர்ந்த சிவதாஸ் பிரியாணி, கரணவாயைச் சேர்ந்த வசந்தகுமார் மதுரன் ஆகிய மூவருமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சிறுவர்கள் யுத்த காலத்தின்போது பெற்றோரை விட்டுப் பிரிந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இள்ங்கோவன், வடமாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள ஆணையாளர் ரீ.விஸ்வரூபன், திணைக்களத்தின் ஆலோசகர் கில்கமுவ மற்றும் வடமாகாண உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இவ்வாறு குடும்பங்களுடன் மீள் இணைக்கப்பட்ட சிறுவர்களின் கல்விக்காக உதவு தொகை ஒன்றை வழங்குவதற்கு ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் இறுதியாக மீள் இணைக்கப்பட்ட சிறுவர்கள் ஆளுநருடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டனர். (பா)

## வாள்கள்..

இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மேலும் தெரிவித்தனர்.

# உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தும் சமாதான பேச்சில் திடசங்கற்பம்

## கூறுகிறார் சந்திரிக்கா

தமது உயிருக்கு அச்சுறுத்தல ஏற்பட்டிருந்த போதிலும் சமாதான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதில் தாம் திடசங்கற்பம் பூண்டிருந்ததாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தெரிவித்துள்ளார்.

பங்களூர் வாழும் கலை பயிற்சி நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மகளிர் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய. போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்த வலயத்தில் அபிவிருத்தித் திட்டங்களையும், சமாதான பேச்சுவார்த்தைகளையும் ஒரே நேரத்தில் தாம் முன்னெடுத்து வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

எல்லா சந்தர்ப்பங்களிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவே விரும்பினேன் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

புலிகள் அரசாங்க அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் பங்கேற்பதனை விரும்பவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச மத்தியஸ்தஸ்துடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட வேண்டுமென தாம் கோரியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தாம் ஆரம்பித்து வைத்த வைத்தியசாலைகளில் தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலுக்கு இரண்டு தினங்கள முன்னதாகவும், அதன் பின்னரும் புலிகள் என் உயிரை காவு கொள்ள முயற்சித்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருண்ட சில தருணங்களை வாழ்க்கையில் கடந்துள்ளதாகவும், கல்வியும் மத நம்பிக்கையும் வாழ்க்கையை செழுமைப்டுத்தியது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட ஓர் தலைவர் தம்மை பற்றி மட்டுமே சிந்தித்தால் அங்கு ஊழல் மோசடிகள் இடம்பெறும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

"அதிகாரம் கடவுளின் பரிசு என ஆட்சியாளர் கருதித்தான் நினைத்ததனை செய்கின்றார். தம்மையும் தமது குடும்பத்தையும் சுற்றி ஆட்சி அதிகாரத்தை வியாபிப்பது மிகவும் ஆபத்தானது" என சந்திரிக்கா தெரிவித்துள்ளார்.

# வலுவடைந்து செல்லும் ஜப்பானுடனான உறவுகள்

## தூதுவர் வசந்த கரன்னகொட தெரிவிப்பு

(கொழும்பு)

ஜப்பானுடான உறவுகள் வலுப்பெற்றுள்ளதாக அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் அட்மிரால் வசந்த கரன்னகொட தெரிவித்துள்ளார்.

ஜப்பானுடன் பேணப்பட்டு வரும் நீண்ட கால உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற இலங்கையின் 66 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

1972ஆம் ஆண்டு முதல் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். இலங்கையில் பல்வேறு துறைகளில் முதலீடு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# பேருந்துகளின் தரத்தை பரிசோதிக்க நடவடிக்கை

பேருந்துகளின் தரத்தை பரிசோதிப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

மாவட்ட ரீதியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக ஆணைக்கழுவின் தலைவர் ரொஷான் குணவர்தன தெரிவித்தார்.

பயணிகள் போக்குவரத்திற்கு ஏற்ற வசதிகள் பேருந்துகளில் காணப்படுகின்றனவா என்பது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படுவதாக தேசிய போக்குவரத்து ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

பேருந்துகளில் காணப்படுகின்ற குறைப்பாடுகளை, ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்தின் ஊடாக கண்டறியவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். பேருந்துகளின் பயண எல்லையை குறிக்கும் பதாகைகளை புதுப்பிப்பதற்காக பிரத்தியேக குழுவொன்றை ஈடுபடுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தியுடன் மோதியது மோட்டார் சைக்கிள்

## வவுனியா வாசி ஸ்தலத்தில் பலி

கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியுடன் மோட்டார சைக்கிளில் வந்தவர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வவுனியா குட்செட் வீதியைச் சேர்ந்த கந்தையா ரகுநாதன் (வயது 44) என்பவர் உயிரிழந்துள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் வீதியின் மருங்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியுடன் மோதியதிலேயே இந்த உயிரிழப்பு இட்ம்பெற்றதாகவும், வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை கிளிநொச்சி பகுதியில் இடம்பெற்ற மூன்று வெவ்வேறு விபத்துக்களில் மூவர் படுகாயமடைந்துள்ளதுடன், விபத்துக்கு காரணமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எம்.கிருஷ்ணராஜா தெரிவித்தார்.

கிளிநொச்சி முரசுமோட்டை ஏ35 வீதியில் நேற்று மாலை துவிச்சக்கர வண்டியில் பயணித்த வரை மோட்டார் சைக்கிள் மோதியதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த பொன்னுத்துரை கந்தசாமி (வயது-60) என்பவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சி 155 கட்டைப்பகுதியில் ஏ 9 வீதியில் வீதியில் பயணித்தவரை பாரவூர்தி மோதியதில் பாலசுப்பிரமணியம் கோகுலன் (வயது-11) என்ற பாடசாலை மாணவன். படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அத்துடன் பாரவூர்தி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் உழவு இயந்திரத்தில் நெல் அறுவடை செய்யும் இயந்திரத்தினை ஏற்றிய போது, அது வீதியில் பயணித்த முச்சக்கர வண்டி மீது மோதியதில் முச்சக்கர வண்டியில் பயணித்த பொன்னையா கந்தசாமி என்பவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அறுவடை இயந்திர ஓட்டுநர் கைது செய்யப்பட்டார்.

# நிரந்தரக் காணிகளற்ற மக்களுடன் அமைச்சர் டக்ளஸ் கலந்துரையாடல்

வலிகாமம் வடக்கு மாவைகலட்டி பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிரந்தரக் காணிகள் இல்லாத மக்களுடன் கலந்துரையாடினார்.

தெல்லிப்பழை மாவைகலட்டிப்பகுதிக்கு நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அங்கு கூடி நின்ற மக்களுடன் கலந்துரையாடி அவர்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது மாவைகலட்டி, மயிலிட்டி, வலிவடக்கு உள்ளிட்ட யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமக்கு நிரந்தர காணிகள் இல்லாத நிலையில் தாம் எதிர்நோக்கிவரும் இடர்பாடுகள் தொடர்பில் அமைச்சருக்கு எடுத்து விளக்கினர்.

மக்களது கோரிக்கையினை கேட்டறிந்து கொண்ட அமைச்சரின் கோரிக்கை தொடர்பான குடும்பங்களின் எண்ணிக்கை, அங்கத்தவர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட முழுமையான விபரங்களை கேட்டுக் கொண்டார்.



இதனிடையே மாவைகலட்டி பகுதியிலுள்ள அரச காணிகள் தொடர்பான விபரங்களை தமக்கு சமர்ப்பிக்குமாறும் பிரதேச செயலக அதிகாரிகளிடம் பணிப்புரை வழங்கினார்.

இதன்போது சண்டிலிப்பாய் பிரதேச செயலரும், தெல்லிப்பளை பதில் பிரதேச செயலருமான முரளிதரன், தெல்லிப்பளை உதவித்திட்டமிடல் பணிப்பாளர் சிவகுமார், அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி குகேந்திரன், வலிமேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் சிவகுரு பாலகிருஸ் ணன் (ஜீவன்), ஈ.பி.டி.பியின் சுன்னாகம் இணைப்பாளர் அன்பு ஆகியோர் உடனிருந்தனர்.

# மருமகளுக்கு சூடுவைத்த மாமனார் விளக்கமறியலில்

கிளிநொச்சி பூநகரிப்பகுதியில் மருமகளான சிறுமியை நெருப்பால் சூடு வைத்து துன்புறுத்திய மாமனாரை 13 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.விஜயராணி சிறுமியை சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

கிளிநொச்சிப் பூநகரிப்பகுதியில் தாய் உயிரிழந்த நிலையில் மாமனாரின் பராமரிப்பில் வளர்ந்து வந்த குறித்த சிறுமி கடந்த 29ஆம் திகதி நெருப்பினால் சூடு வைத்து துன்புறுத்தப்பட்தாக பொலிஸாருக்கும் சிறுவர் நன்னடைத்த அதிகாரிகளுக்கும் உறவினர்களால் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பூநகரிப் பொலிஸார் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபரான மாமனாரை கடந்த 31 ஆம் திகதி கைது செய்து, அன்றைய தினமே குறித்த சிறுமியையும் மாமனா ரையும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றதில் ஆஜர்ப்படுத்தினார்.

இதன்போது, நீதிபதி குறித்த நபரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் பாதிக்கப்பட்ட சிறுமியை மருத்துவ பரிசோதனைக்காக கிளிநொச்சி பொது மருத்துவ மனையில் அனுமதிக்குமாறும உத்தரவிட்டார்.

தொடர்ந்து குறித்த சிறுமியை பூநகரிப் பிரதேச சிறுவர் நன்னடத்தை அதிகாரி எஸ்.சிவபாலசுந்தரம் கிளிநொச்சி நீதவான நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்ப்படுத்திய போது, பதில் நீதவான் குறித்த சிறுமியை பாதுகாப்பாக சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்குமாறு உத்தர விட்டார்.

இந்த வருடத்தில் மாத்திரம் கிளிநொச்சி மாவட்டத்தில் உறவினர்களால் பராமரிக்கப்பட்டு தீயினால் சூடு வைத்து துன்புறுத்தப்பட்ட 3 சிறுவர்கள் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறுவர் இல்லத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வேட்புமனுத் தாக்கல் தொடர்பில் பிரதான கட்சிகளிடையே சர்ச்சை

மேல் மற்றும் தென் மாகாணசபைக்கான தேர்தல்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்காக வேட்பு மனுக்கள் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டது இந்த நிலையில் பிரதான இரண்டு கட்சிகளிலும் வேட்பு மனு தொடர்பில் சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளும் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டமை தொடர்பில் சவால்களை எதிர் நோக்கி வருகின்றன.

இரண்டு பிரதான கட்சிகளும், திறமையான, பிரபலமான இளைஞர் யுவதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொருத்தமில்லாதவர்கள் பலருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக கட்சிகளைச் சேர்ந்த பலர் அதிருப்தி அடைந்துள்ளனர்.

தேர்தலில் போட்டியிடக் கிடைக்காத காரணத்தினால் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிலர் பதவியை துறந்துள்ளனர்.

குறிப்பாக விருப்பு வாக்குகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்களின் போது ஒரே கட்சி வேட்பாளர்களுக்கு இடையில் மோதல்கள் அதிகளவில் வெடிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 பெப்ரவரி 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.